# செந்தமிழ்

தொகுதி : 93 ஜனவரி 1999 பகுதி : 1

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் ***மா.தனுக்கோடிபாண்டியன்*** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் ***நா. பாலுசாமி***
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

# செந்தமிழ் ஆசிரியர் குழு


பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் செ. கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்.

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பேரறிஞர் சி.கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ. மணவாளன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பெரும்புலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் ந. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம். கமால்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈகே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் சே. அரிராமநாதன்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் *மா. தனுக்கோடிபாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.

# பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் ........ 1
பேரறிஞர் நா.பாலுசாமி

2. பெண்மை ........ 7
ச. சோமசுந்தர பாரதி

3. பதிற்றுப்பத்தின் சொற்கொடை ........ 11
பேரறிஞர் அ.மா. பரிமணம்

4. மக்களாட்சி வளர்ந்த வரலாறு ........ 15
பேரறிஞர் பா. சூரியநாராயணன்

5. நிறையும் குறையும் ........ 23
பேரறிஞர் செ. இராஜேசுவரி

6. முல்க்ராஜ் ஆனந்து ........ 27
பேரறிஞர் ஜி.ஆர். கிரிஜா

7. நூல் மதிப்புரை ........ 30
பேராசிரியர் பொன் விசயன்

8. கூடும் பறவையும் ........ 32
பேரறிஞர் மலையமான்!

பேரறிஞர் நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(தொல் - சொல் - வினையியல்)

## சூத்திரம் 241

(காலம் மயங்குதல்)

**வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்**
**ஓராங்கு வரூஉம் வினைச்சொல் கிளவி**
**இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்**
**விரைந்த பொருள என்மனார் புலவர்.**

(ப-ரை.) வாராக் காலத்தும் - எதிர்காலத்திலும், நிகழும் காலத்தும் நிகழ்கின்ற காலத்திலும்,ஓர் ஆங்கு - ஒரு வகையாக, வரூஉம் வருகின்ற, வினைச் சொல் கிளவி - வினைச் சொல் பொருண்மைகள், இறந்த காலத்து - இறந்த கால, குறிப்பொடு கிளத்தல்-இறந்த காலப் பொருளில் வெளிப்படுத்தும் நிலைகள், விரைந்த பொருள - விரைவினைக் குறிக்கும் பொருளைப் பயப்பன, என்மனார் புலவர் - என்று கூறுவர் அறிஞர்.

எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் ஒருவிதமாகப் பேசப்படும் வினைச்சொற்கள், விரைவுப் பொருளை உணர்த்தும் போது இறந்த காலப் பொருளிலும் கூறப்படும். இவ்வாறு கூறுதல் குற்றமன்று; வழுவமைதியாகக் கொள்ளவேண்டும்.

(வி-ரை.) வாராக் காலம் - வருங்காலம், எதிர்காலம். ஓராங்கு - ஒரு வகையில், சில சூழல்களில். வரூஉம் - அளபெடை. கிளவி-பொருள் உணர்த்தும் சொல், பொருண்மை. விரைந்த பொருள-விரைவு கருதிக் கூறப்படுவன. விரைவு கருதியவழி இறந்த காலப் பொருள் தோன்றுமாறு கூறலாம் என அமைதி கூறுகிறார் ஆசிரியர். புலவர் - ஆசிரியர், அறிஞர்.

(எ-டு) சோறு உண்பதற்காகச் சோற்றுத் தட்டின் முன் அமர்ந்திருக்கும் ஒருவனை, விரைந்து செல்ல வேண்டும் என நினைத்து வந்த நண்பன் ஒருவன் அவனைப் பார்த்து, ' இன்னும் உண்ணவில்லையோ?' என்று கேட்டால், உண்ண இருப்பவன் விரைவு கருதி வந்தவனிடம் உண்டுவிட்டேன், வந்துவிட்டேன் என்று கூறக் காணலாம். உண்ணல் தொழில் இன்னும் நடைபெறவில்லை. அவ்வாறு இருப்பவும் உண்டுவிட்டேன் என்று இறந்தகாலச் சொல்லால் கூறுகிறான். இனி நிகழ்காலத்திற்கும் இவ்வாறே கொள்க.

## சூத்திரம் 242

(சிறப்புப் பொருள்)

**மிக்கதன் மருங்கில் வினைச்சொல் சுட்டி**
**அப்பண்பு குறித்த வினைமுதல்கிளவி**
**செய்வ தில்வழி நிகழுங் காலத்து**
**மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.**

(ப-ரை.) மிக்கதன் மருங்கில் - யாதானும் ஒரு மிக்க (சிறந்த) செயலினிடத்து நிகழும், வினைச் சொல் சுட்டி - வினைச் சொல்லை நோக்கி, அ பண்பு குறித்த - அம்மிக்கதன் பண்பைக் குறித்து வரும், வினைமுதல் கிளவி - வினை முதல் எனப்படும் எழுவாயாக வரும் சொல், செய்வது இல் வழி - செய்யப்படுவதாகிய தொழிலைக் குறிக்காத விடத்து, நிகழ்காலத்து - நிகழ்காலத்தால், மெய் பெறத் தோன்றும் - விளக்கமுறத் தோன்றும், பொருட்டாகும் - பொருளை உடையதாம்.

நல்வினை தீவினைகளில் மிக்கதொன்றன்கண் பண்பு குறித்து வரும் எழுவாய்ச் சொற்கள் நிகழ்கால வினை கொண்டு முடியும். அஃதாவது நற்செயல், தீச்செயல்களில் மிக்க தொன்றன் பயனை, ஒருவனைச் சுட்டிக் கூறாமல் பொதுவாகக் கூறுமிடத்து நிகழ்கால வினைமுற்றால் கூறுக என்பதாம். மாறாக, ஒருவரைக் குறித்துக் கூறினால் இடத்திற்கேற்ப இறந்த காலத்தாலோ எதிர்காலத்தாலோ கூறப்படும்.

(வி-ரை) மிக்கது - சிறந்தது, மிகையானது, அஃதாவது நற்செயல் தீச்செயல்களில் யாதேனும் ஒன்றில் மிக்கது, பாவபுண்ணியங்களில் மிக்கது என்பதாம். வினைமுதல் - எழுவாய். செய்வது. தொழில். இல்வழி சுட்டாத போது. போற்றல், தூற்றல் என்பனபோன்ற சொற்கள் போற்றுதல், தூற்றுதல் என்னும் தொழிலையும் (செயல்) உணர்த்தும்; போற்றும், தூற்றும் பண்புகளையும் குறிக்கும். இவ்வாறு தொழில் உணர்த்தாமல் பண்பு உணர்த்தி ஒருவரைச் சுட்டாமல் வருமிடத்து, அப்பண்புச்சொல் தானே எழுவாயாகி நிகழ்கால வினைமுற்றைப் பெறும் என்பது கருத்து. இவ்வாறு அன்றி ஒருவனைச் சுட்டிக் கூறுமிடத்து அவன் தவம் செய்து துறக்கம் **புகுந்தான், புகுவான்** என ஏனைக்காலத்திலும் கூறப்படும்.

## சூத்திரம் 243

**இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி**
**இருவயின் நிலையும் பொருட்டா கும்மே**
**தன்பா லானும் பிறன்பா லானும்.**

(ப-ரை). இது செயல் வேண்டும் என்னும் கிளவி - இது செயல் வேண்டும் என்னும் வாய்பாட்டால் வரும் சொல், தன்பாலானும் பிறன் பாலானும் - தன்பால், பிறன்பால் என்றும், இரு வயின் நிலையும் இரண்டிடத்தும் நிலைபெறும், பொருட்டு ஆகும் பொருளை உடையதாம்.

'இது செயல் வேண்டும்' என்னும் வாய்ப்பாடு பற்றி வரும் சொல், 'தன் வினைமுதல்' பிறவினை முதல் ஆகிய ஈரிடத்தும் நிலை பெறும் பொருளதாகும்.

(வி-ரை) இது - செயல் - வேண்டும்; இம்மூன்றும் வாய்பாடுகளே, 'இது' என்னும் வாய்பாடு, 'செயல்' என்னும் வாய்பாடு, 'வேண்டும்' என்னும் வாய்பாடு என விரித்துக் கொள்க. பொருட்டு - பொருளை உடையது. கிளவி - சொல்

(எ-டு) கண்ணன் ஓதல் வேண்டும் - இத் தொடரில் வேண்டும் என்பது ஓதலை விரும்பும் வினை முதலாகிய கண்ணனுக்கும், கண்ணன் ஓதலை விரும்பும் அவன் தந்தைக்கும் என ஈரிடத்தும் பொருந்துமாறு காண்க. வேண்டும் என்பது செய்யும் என்னும் வாய்பாடு போலக் கொள்க.

## சூத்திரம் 244.

**வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்**
**எதிர்மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்தே.**

(ப-ரை) வன்புற வரும் - வற்புறுத்தும் பொருளில் வரும், வினா உடை வினைச் சொல் - வினாவை (கேள்வி) உடைய வினைச் சொல், எதிர் மறுத்து உணர்த்துதற்கு - எதிர்மறையை உணர்த்துவதற்கு, உரிமையும் உடைத்து - உரிமை உடையதாகும்.

வற்புறுத்த வரும் வினாவோடு கூடிய வினைச் சொல், எதிர்மறைப் பொருளை உணர்த்தவும் செய்யும்.

(வி-ரை) வரூஉம் - அளபெடை. வினா உடை - வினாவை உடைய. வினைச்சொல் - வினைமுற்று. ஆ, ஏ, ஓ - இம் மூன்றும் சொல்லின் ஈற்றில் நின்று வினாப் பொருளை உணர்த்தும். இச்சூத்திரத்தில் ஆ, ஏ இரண்டும் பற்றிக் கருதப்படும். ஓகாரம் இடைச் சொல்லியலில் பேசப்படும்.

(எ-டு) கோபத்தாலோ, குடியினாலோ ஒருவன் அறிவு மயங்கி ஒருவனை வைதான் ; அவன் அறிவுத் தெளிவு ஏற்பட்ட பின், வையப்பட்டவன் ' நீ என்னை வைதாய் என்ற போது, தான் முன் வைதது உணராமையால் 'வைதேனே ' என்பான். இங்கு வைதேனே என்ற வினாவோடு வந்த வினைச்சொல், ' வையவில்லை ' என்னும் எதிர்மறைப் பொருளைப் பயக்கும். இவ்வாறு கூறுவது மரபு வழுவாயினும், அமைதியாகக் கொள்ளப்படும். இது மரபு வழுவமைதி.

## சூத்திரம் 245

**வாராக் காலத்து வினைச்சொல் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்**
**இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை.**

(ப-ரை) வாராக் காலத்து - எதிர்காலத்துக்குரிய, வினைச் சொல் கிளவி - வினைச் சொல், இயற்கையும் - இயற்கைப் பொருளிலும், தெளிவும் - தெளிவுப் பொருளிலும், கிளக்கும் காலை - சொல்லும் போது, இறப்பினும் - இறந்த காலத்தாலும், நிகழ்வினும் - நிகழ்காலத்தாலும், சிறப்பத் தோன்றும் விளக்கமாகத் தோன்றும்.

எதிர்காலம் குறித்து வரும் வினைமுற்றுச் சொல், இயல்பான பொருளிலும், தெளிவு உணர்த்தும் பொருளிலும் கூறுமிடத்து, இறந்த கால வினைமுற்றாலும், நிகழ்கால வினைமுற்றாலும் விளக்கமாகத் தோன்றும்.

(வி-ரை) வாராக் காலம் - வருங்காலம் அல்லது எதிர்காலம். கிளவி இங்கு முற்று வினை. இயற்கை - இயல்பானது. தெளிவு- தெளிந்த பொருள்.

(எ-டு) இக்காட்டுக்குள் போவான் கூறை கோள் பட்டான் - இத் தொடரில் போவான் என்பது எதிர் காலம் உணர்த்தும். கோள்பட்டான் - இது இறந்த காலம் உணர்த்தும். (கோள்பட்டான் - பறிக்கப்பட்டான், பறி கொடுத்தான்). கூறை ஆடை முதலியன. வழிப்போக்கரின் பொருளை அக்காட்டில் சென்றால் கள்வர் முதலானவர் களைந்து கொள்வது இயல்பாதலால் இவ்வாறு இயற்கை பற்றி வருங்காலம் இறந்த காலத்தால் கூறப்பட்டது. இது வழுவாயினும் கால வழுவமைதியாகக் கொள்க என்பது கருத்து.

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது. இத்தொடரில் ஏறின் (ஏறும் போது) மழை உறுதியாகப் பெய்யும் என்பது நூல்களால் அறியப்படும், தெளியப்படும் உண்மையாதலினால் நிகழ்காலம் இறந்தகாலமாகக் கூறப்பட்டது. இதுவும் கால வழுவமைதியாகும்.

## சூத்திரம் 246

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழில்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.**

(ப-ரை) செயப்படு பொருளை - செயப்படு பொருள்தரும் முற்றுவினையை. செய்தது போல் - கருத்தாவின் (வினை முதலின்) செயல் போல, தொழில் படக் கிளத்தலும் தொழில் படச் சொல்லுதலும் வழக்கியல் மரபு - உலக மரபாகும்.

செயப்படு பொருளைச் செய்பவன் தொழிலாகக் கூறுதலும் உலகியலின் பால் பட்டதாகும்.

(வி.ரை). செயப்படுபொருள் - இரண்டாம் வேற்றுமைப் பொருள். மரம்+ஐ= மரத்தை ('ஐ' இரண்டன் உருபு) செய்தது போலக் கருத்தா

(செய்பவன்) தொழில் போல். வழக்கு - உலக வழக்கு (இலக்கண வழக்கன்று).

(எ-டு) திண்ணை மெழுகிற்று. இதில் மெழுகிற்று என்பது மெழுகப்பட்டது என்ற செயப்படுபொருளில் வந்த செய்வினை. செய்வினை, செயப்பாட்டு வினை என வினை இருவகைப்படும்.

**நம்பி மரம் வெட்டினான் - செய்வினை**
**நம்பியால் மரம் வெட்டப்பட்டது - செயப்பாட்டு வினை.**

செயப்பாட்டு வினையைச் செய்வினையாகக் கூறுவது உலகியல் என்பது பொருள். இது மரபுவழுவமைதி.

## சூத்திரம் 247

**இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்**
**சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.**

(பொருள்) இறந்த காலமும் எதிர் காலமும் மயங்கி வருதலும் உண்டு. இதுவும் கால வழுவமைதி.

(எ-டு) இவர் முன்பு இச் சோலையில் விளையாடுவார் - இத் தொடரில் **முன்பு** என்பது இறந்த காலம். விளையாடுவார் எதிர்காலம். இவ்வாறு கூறுவது இலக்கணப் பிழை. ஆயினும் கொள்க என்று காலவழு அமைக்கின்றார் ஆசிரியர். இது காலமயக்கம் எனப்படும்.

## சூத்திரம் 248

**ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.**

(பொருள்) இறந்த காலமும் எதிர்காலமுமேயன்றி (முன் சூத்திரப் படி), நிகழ்காலமும் அவ்விரண்டு காலங்களோடும் மயங்கிவரும்.

(எ-டு) இவர் இப்பொழில் பண்டு விளையாடும். பண்டு (பண்டைக் காலம்) - இறந்த காலம். விளையாடும் - விளையாடுகிறான் என்பது பொருள். (நிகழ் காலம்) இதுவும் நிகழ்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்ட காலவழுவமைதியாகும்.

(தொடரும்)

# பெண்மை

ச. சோமசுந்தர பாரதி

நிலையற்ற சில உறுப்பு வேறுபாடுகளன்றி, மக்களுள் ஆடவர்க்கரியதாய் மற்றவர்க்கே உரியதாய் நிலைத்த பெண்ணீர்மை என்பதொரு தனிப்பான்மையுண்டோ? என்னுமையம் பெருகிவரும் தற்கால நாகரிகவுலகில் "பெண்மை" பற்றிய ஆராய்ச்சி பயன்படுமோவென்று அஞ்சுகிறேன். உருவோடு உணர்ச்சி தொழிற்றிறங்களாலும் இருபாலாரும் தம்முள் இயல் வேறுபாடுடையவரென்று இதுகாறும் எண்ணிவந்த கருத்து இப்போது சிலகாலமாக நிலைதடுமாறி அலமருகின்றது. எனைத்தானும் ஆடவரினின்றும் வேறுபடா உணர்ச்சியும், அவர் தொழில் துறைகளனைத்திலுமே சமஉரிமைப்பாடும் தற்காலம் பெண்பாலார் கொண்டாடிவருகின்றனர். அவயவ அமைப்பிலுங்கூடப் பால் பகுத்தறியவொண்ணாப் பொதுமைநிலையுடைய மக்களையும் தற்காலம் பார்க்க நேருகிறது. ஒருபாலும் மருவாத அலிகள் மட்டுமில்லை; இருபாலும் உரு விரவி உறழ்பாலார் சிலரும் உளர். ஒருபாலாய்ப்பிறந்தவரும் நாளடைவில் மறுபாலின் பான்மையெலாம் மருவவும் பெறுகின்றனர். இவ்வாறு பால்நிலையே தடுமாறப் பார்க்கின்றோம். எனவே பெண்மையென்பதொன்று உண்டா? உளதெனில், பெண்ணியல்புதான் என்ன? இதுபற்றிச் சிறிது ஆராய விடைகொள்வோம்.

யாண்டும் யாதும் ஒருபொருளின்றிச் சொல்லமைதி. குறித்த பொருளை வகுத்துத் தொகுக்கும் சொல்லமைதி தமிழில் பெருவரவிற்றாம். பண்பு தொழில் முதலியவற்றுள் ஒன்றன் தனிச்சிறப்புடைமை தனிஉரிமைப்பாடுபற்றி ஒருபொருளை விளக்கும் ஆற்றலுடைய சொல்லாட்சியே ஆன்ற பழந்தமிழ்மரபு. 'பெண்மை ' என்பது, "பெண் " என்னும் முதனிலையடியாகப் பிறந்துளதாகவே இது பெண் தன்மையைக் குறிப்பது என்பது வெளிப்படை. ஆகவே, இனிப் "பெண்" எனும் சொற்பிறப்பும் அதன் பொருட் குறிப்பும் ஆராய வேண்டும். நட்புநிலையினர் நண்பராவது போல, பெட்புநிலையினர் பெண்டிராவர். 'பெட்புச்' சொல் காதற்பொருட்டு. பேணற்குரிமை அதன் குறிப்புப் பொருள். எனவே காதற்கிழமைக்குச் சிறந்தவர் பெண்மக்கள் என்பது விசதமாகிறது. அதாவது, பெண்மைச்சொல் காதலிப்பவர் காதற்குரியவர் என்றிருவகையும் பொருளியைபு பொலிந்து பெண்ணியல்பின் பெருமையை விதந்து சுட்டி நிற்கும். எனவே, அன்பின் பண்பிற்கு அடிக்களமும் முடிக்கனியுமாவது பெண்ணீர்மை என்பது பெறப்படுகின்றது. காதலை ஆக்கவும் ஆளவும்

வல்லுநர் பெண்டிரே. அஃது அவர்தஞ் சிறப்புரிமையாகும். அன்புவழிப் பேணலும் பேணப்பெறலும் பெண்டிர்மாட் டியலமைப்பு என்பதே பெண்மைச் சொல்லின் உண்மைப் பொருளாகும்.

உறவு, உதவி, அண்மை, இனிமையாதி காரணம் எதுபற்றியேனும் உளங்கனியுமிடங்களிலே எல்லாரும் அன்பு செய்வர்; தந்தை மகனையும், நண்பன் அன்பினையும் காதலிப்பது இயல்பாகலான், பெண்டிர் காதலுக்குச் சிறப்புரிமை கொள்ளுவது எங்ஙனம்? எனிற் கூறுதும். பொதுநோக்கில், காதல் மக்கட்கு மட்டுமில்லை; அகில உயிரினத்துக்குமே பொதுக்குணமாகி நிற்கும். எனினும், காதலிக்கும் முறைவிசேடங்களாலும் காதற்றன்மையாலுமே காதல் மாந்தரிடம் சிறந்து மலர்வதனால், மற்றும் மாக்களினும் மக்களே காதற்கிழமையுடையராகக் கருதப்படுகின்றனர்.

அதுபோலவே மக்கள் வருக்கத்துள்ளும், நம்பியரை விட அன்பிற்கு நங்கைமார் தங்குமிடனாகின்றனர். ஆண்மக்கள் வாழ்க்கையிற் காதலைத் தமக்குத் தனிமுழுநோக்கமாகக் கொள்ளுவதில்லை. வீரம், செல்வம், கல்வி, புகழ் முதலியன பலவும் அவர் மனத்தைக் கவருகின்றன; அவருள்ளத்தில் ஒருங்கே ஒத்து இடம் பெறுகின்றன. மடந்தைமார் மனப்பான்மை இதற்கு மாறுபட்டது. அன்புகனிந்த வழி, மடவார் இதயமுழுதுமே காதற்களனாகிமலரும். பெருகுமன்பன்றிப் பிறிதெதுவும் அவருளத்தில் ஒதுக்கிடமும் பெறுவதில்லை. காதல் பெண்டிர் பெருங்குணமான நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவையும் உடைத்து, அவர் உள்ளத்தரண் எறிந்து இடங்கொண்டு தழைவதாகும். கதித்தகாதல் மங்கைமார் மனமகலா நிறையெனும் அங்குச உருக்கையும் நிமிர்க்கவல்லது; மடந்தையர்க்குத் தனியுடைமையான தாய்மையைக் கூடத் தனக்கெதிர்முனைப்பில் தவிர்க்கும் தகையது அவர்தம் காதலெனில், அதன் பெருமை அளப்பரிதாம்.

இனிப் பிறபெற்றிகளுக்குச் சிறிதும் இடந்தராது பெருகிப் பெண்டிர்மனத்திற் றனியிடம் கோலும் அவர் அன்பு, கனியாது காயாது பூவாது வெறிதே இலைமலிந்து படர்ந்தடரும் புதருமில்லை. பெண்மையைப் பெருமைப்படுத்தும் அனைத்துயர் பண்புப் பயிர்களையும் வித்தி, அவற்றிற்குத் தானே நீரும் எருவுமாய் நின்று வளர்ப்பதுவும் அப்பெண்டிர்தம் பெருங்காதலேயாகும். அவரன்பினாலேயே இல்லாண்மை, தாய்மை, மகண்மை எனும் எல்லாப் பெருங்குணமும் வேரூன்றி வளம்பெற்று வளர்வதாகும். பெண்டிர்பால் அன்பு பிறிதெதற்குமில்லாத பெருங்கிழமை பெற்று நிற்கும். நல்லார் மனத்தவிசில் எல்லாம் தனக்குரிய இறைமைக்குழவியும், அவர்மனத்தே நல்லவையெல்லாம் நாடிவளர்க்கும் நற்செவிலியும் தானேயாய் மிளிர்வது அவர்தம் பேரன்பே. தன்வளர்ச்சியைத் தடுக்கும் எதனையும் வேரறுத்துக் களைந்தெறியவும், தான் தழையுங்கால் கண்ணிய குணங்களைத் தண்ணிழல்

தந்து உடன் தழைய வளர்க்கவும் ஒருங்கேவல்லது அவர் பெருங்காதலே. அவர் அன்பின்பண்பு தனக்குரிய தகவிடத்தில் முளைகோலித் தனைத்தடுக்கும் களையடர்த்துத் தளராது தானே தழைதலும், தன்வளர்ச்சி தவிர்ப்பவற்றைத் தகர்த்தொழிக்கும் கணிச்சித்திட்பத்தோடு, வினைத்துறவின் தனிமையை வெறுத்து இல்வாழ்வின் நல்லாற்றில் நின்று நலம்பலவும் உடன் குலவ அவையிற்றை உயிர்ப்பித் தூட்டித் தழைவிக்கும் நெகிழ் நீர் நேசத்தட்பமும் ஒருங்கமைந்து மிளிர்தலுமாம். ஒல்லும்வகையால் நலமனைத்தும் ஓவாதே செல்லும்வாயெல்லாம் செயவல்லது பெண்டிர் பேரன்பு.

இனி, அன்பைத் தாம் ஆக்கிச் செலுத்தி ஆளுமாற்றலேபோல, பெண்மக்கள் தம்மிடைத் தகவுடையோர் அன்பு நனி அரும்பிக் கனிவு பெறச் செய்விக்கும்பெற்றியும் தாமே உடையராவர். பொருந்தார் உளத்து அவர் புகுதலோஇல்லை; பொருந்திய சான்றோர் திருந்தியமனமார் விருந்தாகி, இருபாலாரிடத்தும் காதலைப் புனிதப்படுத்துவதே பெண்டிர் பேரியல்பு. தம்மையும் தம்வழித் தகவுடைக் குடியையும் பேணும் அன்பைப் பெண்டிர்தரப் பெறுவர் ஆண்மக்கள். மனைமாட்சியை மங்கலமாக்கி, அதற்குரிய நன்கலமாம் நன்மக்கட்பேறுதவி, வாழ்க்கையை வளப்படுத்துவது பெண்ணியல்பே. பெண்ணீர்மைகுன்றின் மக்கள் மென்மையறியார், மேதக்க காதற்சிறப்புணரார். அன்பால் தற்கொண்டானையும், அது முதிர்ந்து மலர்ந்த தகைசான்ற அருளால் அனைவரையும் பேணும் பெருங்கிழமை பெண்டிரியற்சிறப்பாம். பேணுமியல்விழைவும், பேணுந்துறையறிவும், பேணுமுறை வளமும் எல்லாம் பெண்டிர்மாட் டியலமைந்த தனிச்சிறப்பாம். அவர் பேணப் பெறுதலாலே ஆடவர் தாம் பேணும் அன்புணர்ச்சி பெறுகின்றனர்.

இன்னும், பெண்டிர் அன்பு தாம்வீழ்வார்தம்மாட்டுக் குழையும் மென்மைத்தன்மையோடு நின்றுவற்றும் சிறுமைத்தன்று. தம்மைத் தாம் தலைக்காத்துத் தற்கொண்ட ஆடவரை அறத்துறையில் நிறுத்தும் வன்மையும் பெண்ணீர்மை பெற்றுடையதாம். குடிப்பெருமையை நீட்டி யுயர்த்தும் நீள்வினைக் கின்றியமையாத ‘ஆள்வினையும் ஆன்ற அறிவும்’ பெண்டிர் பெருஞ்சிறப்பாம். ஆடவர் அனுபவிக்கக் குழைந்திழையும் மலர்க்கொத்தே பெண்களென்பார் இயலறியார். அறந்தழைய அடிக்களனாய், தமக்கின்பம்விழையாமல் உடம்பு இடும்பைக்கிலக்கெனத் தெளிந்து பிறர்பொருட்டுப் பரித்தியாகமும், காதல்வழி உயிரையும் துறக்கும் கலங்காத துணிவுள்ளமுடைமையும் பெண்மைவளச் செம்புலத்துப் பைங்கூழாம். இதுபற்றியன்றோ வள்ளுவரும், ‘ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற-சொற்காத்துச் சோர்விலா’ளையே பெண்ணெனப் பேசுகின்றார் எனவே, பெண்மை அன்புருவும் அறத்துயிருமாவதென அறிகின்றோம்.

இனி, "நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்ற குறளுரை, வாய்மையாம் எனினும், முழுமெய்ம்மையாகாது, இக் குறட்பொருளுண்மை தெளியின், பெண்டிரைத் தம்மினமாப்பெற்ற பெருந்தொகுதியாதல் பற்றியே மாந்தர்வகுப்புக்கு இப்பேறு வந்துற்றதென்பது அங்கையிற் கனியாகும். பெண்மைமாடம் நின்ற தூண்கள் நான்கனுள் முதலது நாணாவதும், ஆண்மை நடக்கும் அடிகள் நான்கில் யாண்டும் அது வைத்தெண்ணப் பெறாமையும், நாணுடைமை முதலிற் பெண்ணுரிமை என்பதை வலியுறுத்தும். சால்பூன்றியதூண் ஐந்தனுள்ளே இறுதி வாய்மை இருபாலோர் பொதுவுடைமையாக, மற்றையநான்கும் முதலிற் பெண்டிர்க் கியற்குணமாய் அவரூட்ட ஆடவர்பால் அவை ஊட்டம் பெறுவதை நடுநிலையிற் சிந்திப்பார் நன்குணர்வர். எனில், பெண்மையே சான்றாண்மை எனச் சுருங்கச் சொல்லில், அஃது அமைவுடைத்தாம். சான்றாண்மை நன்புலத்தில் முளைத்துவளரும் பெண்மைக்குப் பிறிது இலக்கணம் வகுத்தல்வேண்டா. அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை-எனும் ஐந்தனுள் அமையாத சால்புடைமை யாதும் இல்லை. மானுடப்பெருமைக்குரிய பண்பனைத்தும் இவ்வைந்தனுள் வந்தடங்கும். இவ்வைந்தையும் ஒருவாறு முதன்மூன்றனுள்ளே அடக்கலுமாகும். இவ்வாறு முக்காலிற் சான்றாண்மை நிற்றல்கூடும். அதன்கனியாம் பெண்மைப் பெருங்குழவி நின்றிலக மூன்றுகால்கூட மிகை. பெண்மைநிதி வள்ளுவர் முன் முதல்வகுத்த அன்பொன்றில் தான் ஒன்றித் தலைநின்று மிளிர்வதாகும். அன்பொன்றே சான்றாண்மை வித்தாகும். அதனுள்ளே பிறவெல்லாம் அமைந்து நிற்கும். நல்ல பிற குணமெல்லாம் அன்புவிதை முளைக்கத் தாம் கிளைத்தளிராய், முதல்தழைய அது தழுவி உடன்தழையும் அதற்குரிய இயல் உறுப்பாய் அமைந்தடங்கும். சான்றாண்மைமலர், பிஞ்சாய்க் காய்காழ்த்து அதிற்பழுக்கும் நறுங்கனியே பெண்மையாகும். எனவே, பெண்ணீர்மை கண்ணும் பெருங் குணமெல்லாம் விரித்து ஈண்டுப் பேசல்வேண்டா. பெண்மையை அன்பின்திண்மையெனல் தவறாகாது. காழ்த்துமுதிர்ந்த கனிச்சுவைபோல், வளமலிந்த அன்பின்பழரசமேபெண்மையாகும். தானும் இனித்துதவித் தன்காழால் பழமரங்கள் வித்திவருங் கனியேபோல், பெண்மை தானும் காதலித்துத் தம்வீழ்வார் தம்மிடையும் அக் காதற்கனியைக் கனிவித்தொளிரும் ஒரு கற்பகமாம், யாண்டும் கனிவிக்கும் ஒட்பமும், வேண்டுழிக் காழுதவும் திட்பமும் ஒருங்கமைந்த சான்றாண்மைத் தருவில் வரு தலைக்கனியே பெண்மை எனலாம்.

(இக் கட்டுரை செந்தமிழ் இதழில் தொகுதி 27, பகுதி 10 (1929) வெளி வந்தது).

# பதிற்றுப்பத்தின் சொற்கொடை

**பேரறிஞர் அ.மா. பரிமணம்**

பதிற்றுப்பத்தில் பாடப்பெற்றுள்ள வேந்தர்கள் தங்கள் மேல் பாடப்பெற்ற பத்துப்பாடல்களுக்குப் பரிசிலாக வழங்கிய பாங்கினைச் சங்க நூற்பயிற்சியுடையார் அனைவரும் அறிவர். கொடை வகை, கொடையளவு போன்றவற்றை வியந்து, சற்றே, நம்புதற்குத் தயங்குபவர்களும் அப்பெரு மன்னர்களின் கொடையுள்ளத்தின் பெருமையையுணர்ந்து போற்றத் தயங்கமாட்டார்கள். பதிற்றுப்பத்து, பிற சங்க இலக்கியங்களில் இடம் பெறாத பல சொற்களைப் பெயர்களாகவும், எச்சங்களாகவும் கொண்டு திகழ்கின்றது. தன் சொல்வடிவங்களைத் தன் பாடல்களால் காத்துத் தமிழ் மக்களுக்கு வழங்கிய பெருமை அந்நூலுக்குண்டு. அச்சொற்கள் பழந்தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு, மரபுகள் போன்றவற்றை உணர்த்துவனவாக அமைந்திருத்தலால், அவை, அந்நூல் காத்து வழங்கிய சொற்கொடையாக-மொழிக் கொடையாகப் போற்றிக் கொள்ளத்தக்கனவாகும்.

சங்க நூல்களில் பதிற்றுப்பத்தினால் மட்டுமே அறியக் கூடிய சொற்களுள் 'பைதிரம்' என்பது ஒன்றாகும். இச்சொல் பதிற்றுப்பத்தின் இரு பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இரண்டாம் பத்தின் பதிகத்தில் இப்பெயர் இடம் பெற்றுள்ள போதிலும், அப்பத்தின் பெயர்களைத் தொகுத்துக் கூறும் நிரலுள் காணப்படுவதால், தனியாக எண்ணப்படவில்லை. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை இரண்டாம் பத்திற்பாடிய குமட்டூர்க் கண்ணனார்.

> **"இனம் தோடகல' ஊருடன் எழுந்து**
> **நிலம் கண்வாட நாஞ்சில் கடிந்து நீ''**
> **வாழ்தல் ஈயா வளன் அறுபைதிரம்'' - (பதி. 19: 16-18)**

என்றும், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலை நான்காம்பத்தில் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்

> **"வளம் தலை மயங்கிய பைதிரம் திருத்திய**
> **களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்'' - (பதி. 38: 3-4)**

என்றும் கூறியுள்ள பகுதிகளில் இச்சொல் இடம் பெறுகிறது.

இச்சொல்லைப் பயன்படுத்திய குமட்டூர்க் கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார் ஆகிய இருவரும் பதிற்றுப்பத்துப் பாடல்களை மட்டுமே பாடியவர்கள் என்பதும், அவர்களால் பாடப்பட்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும் முறையே தந்தையும் மகனும் அவர் என்பதும் நினைக்கத்தக்கன. இப்பகுதிகளுக்கு உரை வரைந்த உ.வே.சா. ஔவை. துரைசாமி, அருளம்பலம், ந.சி.கந்தையா போன்ற பலரும் 'பைதிரம்' என்பதற்கு 'நாடு' என்றே பொருள் கூறியுள்ளனர். நாடு என்பதன் பரியாயப் பெயராக் கொண்டு அவர்கள் கூறியதற்குத் திவாகரம், பிங்கலந்தை போன்ற நிகண்டுகள் காரணமாகும். *திவாகரம்,*

**"பைதிரம் மண்டிலம் பாண்டில் தேயம்**
**தண்ணடை சனபதம் அகவள் சும்மை**
***கண்டம் ஏணி உலகு என்றிவை நாடே''*** - (355) *என்றும்,*
பிங்கலந்தை,

**"பைதிரம் மண்டிலம் பாடி தேயம் ....**
**.............................................. நாடென்ப''** - என்றும் நூற்பாக்கள் செய்துள்ளன.

சென்னைப் பல்கலைக் *கழகத் தமிழ்ப் பேரகராதி* **(Tamil Lexicon)** 'பைதிரம்' என்பதற்குப் பொருள் கூறுங்கால், நாடு என்று குறிப்பிடுகிறது. அந்த அகராதியில் அடுத்த சொல்லாக அமையும் 'பைதிரம்' என்பதற்கு (1) "That which pertains to father *தந்தைக்குரியது*; (2) "*That which is inherited from* one's father தந்தைவழி வந்த பொருள்; ..... " என்று பொருள் கூறியுள்ளது. 'பைதிரிகர் என்னும் வடமொழிச்சொல், தந்தைக்குரியது என்னும் பொருளில் வழங்குவது என்றும், தந்தை எனப் பொருள்படும் 'பிதிர்' என்னும் வேர்ச் சொல்லின்வழி அச்சொல் வந்தது என்றும் வடமொழியாளர் கூறுகின்றனர். இவற்றை மனத்துட் கொண்டு நோக்குங்கால், 'பைதிரம்' என்னும் சொல், பொருள் அடிப்படையில் 'பைதிரிகம்' என்னும் சொல்லிலிருந்து அமைந்ததாகலாம் என்று கொள்ள முடிகிறது. தமிழிலிருந்து வடமொழி, பிராகிருதம் போன்ற மொழிகளுக்குத் தமிழ்ச் சொற்கள் சென்று

வழங்குவதுபோல, அவற்றினின்றும் சிலசொற்கள் தமிழில் வந்து வழங்குதல் இயல்பே. இன்றியமையாமை கருதி மொழி வழக்கில் நடைபெறும் இந்த 'வரவு செலவில்' வரவினை - உளங்கொண்ட தொல்காப்பியர் மிகத்தெளிவாகவும் உறுதியாகவும்,

'வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'' என்று இலக்கண வரையறை செய்துள்ளார்.

தந்தை வழி மக்களுக்கு வந்து சேரும் பொருட்களில் செல்வம், நிலபுலங்கள், ஆட்சி உரிமை முதலியன அடங்கும். ஒரு தந்தைக்கு நான்கு மைந்தர் உளராயின், அவருடைய செல்வம், நிலபுலன்கள் முதலியவற்றைப் பகிர்ந்தளித்து நால்வர்க்கும் உடைமையாக்கலாம். நாட்டினது ஆட்சியை அவ்வாறு பகுத்தளித்து உரிமைப்படுத்துவது முறையாகாது. அங்ஙனமாயின் நாடு பல துண்டுகளாகிக் குழப்பம் மிக்கு இறுதியில் அழிவெய்தல்கூடும். நாட்டின் ஆட்சி உரிமை அரசனிடமிருந்து உடன் பிறந்தான் ஒருவனுக்கோ, மைந்தருள் ஒருவனுக்கோ முழுமையாக இறங்குவது - உரிமைப்படுத்துவது என்பது முடியாட்சியில் பொதுவாக அமையும் மரபாயிற்று. அதனால், தந்தை வழி அமையும் உரிமை பிறபொருள்களிலும் நாட்டிற்கு - நாட்டாட்சிக்கு - மிகவும் இன்றியமையாததாகலின், 'பைதிரம்' என்னும் சொல், தந்தைவழி உரிமை இறங்கும் பிறபொருட்களுக்கு ஆகாமல் நாட்டுக்கு மட்டுமே ஆகியது. மேலும் அதனால்தான் 'பைதிரம்' என்பது நாடு என்பதன் பரியாயப் பெயராகக் கொள்ளப்பட்டு வழங்கப் பெற்றுள்ளது. நாட்டாட்சி உரிமை என்னும் சிறப்புப் பொருள் கருதி அமைந்த 'பைதிரம்' பின்னர், நாட்டைச் சுட்டும் பொதுப் பெயர்களுள் ஒன்றாகியது. அந்த நுட்பத்தை உணர்ந்த அருளம்பலவனார் 38-ஆம் பாடலில் இடம் பெறும் இச்சொல்லின் விளக்கவுரையில் "சேரனுக்குரிய நாடு தந்தை வழியில் வந்தமையின் அதனைப் பைதிரம் என்றார். பைதிரம் என்பது, 'பைத்ரம்' என்னும் வடமொழித் திரிபு. இது பிதிர் வழியில் வந்தது என்னும் பொருட்டு" என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

குமட்டூர்க் கண்ணனார், தன் பாடலில், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் பகைவர் நாட்டினைக் குறிக்கும் போது பைதிரம் என்னும் சொல்லைக் கண்டுள்ளார். இமய வரம்பனுக்கும் பகைவர் பொதுவாகச் சோழ பாண்டியரே ஆவர். சோழ பாண்டியர் இருவரும், 'தந்தைக்குப் பின் மைந்தர்' என அமையும் மக்கட்டாய மரபினர் என்பதில் ஐயமின்று. காப்பியாற்றுக் காப்பியனார், நார்முடிச்சேரலின் நாட்டினைக் குறிப்பிடும் போது இச்சொல்லை ஆண்டுள்ளார். பைதிரம் என்பதற்குப் பொதுவாக நாடு என்றிருப்பது பொருத்தமேயாகுமெனினும், அச்சொல்லை ஊன்றி நோக்குங்கால், சேர நாடும் ஏனைய சோழ பாண்டிய நாடுகளைப் போலவே மக்கட்டாய உரிமை முறையினையே பெற்றிருந்தது என்பதனை உணரலாம். அங்ஙனமாயின் 'பைதிரம்' என்னும் சொல், பண்டைத் தமிழகத்தே விளங்கிய மூவேந்தர்களும், மக்கட்டாய உரிமையே பெற்றிருந்தனர் என்னும் வரலாற்று உண்மையைச் சொல்லாட்சியால் உணர்த்தும் சான்றாக அமைவதனை உணரலாம்.

தமிழ் வழங்கிய பண்டைச் சேரநாடு, மொழிக் கலப்பால் மலையாளம் வழங்கும் கேரளம் ஆன பின்னர்த் திருவனந்தபுரத்து மன்னர் மரபில் புகுந்த 'மருமக்கட்டாயம்' தமிழறிஞர் சிலரைச் சிந்தை மயங்கச் செய்தது. அதனால் பதிற்றுப்பத்தின் பொருள் கூறுவதில் அறிஞர்கள் சிலரிடையே மயக்கம் ஏற்பட்டது. அதன் விளைவாகப் பண்டைச் சேர வேந்தரிடையே மக்கட்டாயம் நிலவாது, மருமக்கட்டாயமே நிலவியது என்று வலிந்து, வன்மையாக வாதிடுவாராயினர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்ப் பெரும்புலவர்கள் சிலர் இது குறித்து மாறுபட்டு, எழுதிவருவாராயினர். சேர மன்னர் மரபிலும், ஏனைய தமிழ் வேந்தர்களைப் போல, மக்கட்டாய உரிமையே நிலவியது என்னும் முடிவு பெரும்பாலோரால் ஒப்புக் கொள்ளப்படுவதாயிற்று. மக்கட்டாயத்தை உடன்பட்டும் மறுத்தும் எழுந்த வாதங்களில், அன்று, 'பைதிரம்' என்னும் சொல்லாட்சியின் உண்மை பற்றிய சிந்தனை இடம பெற்றதாகத் தெரியவில்லை. மக்கட்டாயமே என்னும் முடிவிற்கு அரண செய்யும அகச் சான்றுகளுள் ஒன்றாகப் 'பைதிரம்' என்னும சொல்லாட்சி அமைந்திருப்பது அறிந்து இன்புறத்தக்கதாகும் (தொடரும்)

# மக்களாட்சி வளர்ந்த வரலாறு

பேரறிஞர் பா. சூரியநாராயணன்

## இயல்

## 1. மக்களாட்சி பற்றிய இக்காலக் கருத்து

### 1. அரசின் தோற்றம்: அரசு தெய்வத்தால் உண்டாக்கப்பட்டதன்று:

மனிதன் தன் தேவைகளை - அஃதாவது உணவு, உடை, இருக்கை முதலியவை - நிறைவு செய்யும் பொருட்டும், யாவருக்கும் இத்தேவைகள் நிறைவுசெய்யப்படும் பொருட்டும், சமுதாய நலனுக்குக் கட்டுப்பட்டு, அதன் நெறிமுறைகளைச் செயல்படுத்தும் ஆட்சி நிறுவனங்களுக்குக் கீழ்ப்படிந்தும் நடக்கும் இயல்பு உடையவன். எனவே அவன் தன் இனத்தாரோடு கூடி சமுதாயமாக வாழ்பவன். ஆகையால் அவனுடைய சமுதாய உணர்வினைக் காட்டும் ஓர் அடையாளமாக அரசு (State) இருக்கிறதென்று நாம் கூறலாம். அரசு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு, மக்கள், அரசாங்கம் என்னும் நிறுவனம், இறைமை அல்லது மற்ற அரசுகளால் ஆளப்படாமல் சுதந்திரமாக இருக்கும் நிலைமை என்னும் நான்கு கூறுகளை உடையது என்பர் அரசியல் ஆசிரியர்கள். இவற்றுள் முதல் 3 கூறுகளைப் பொறுத்தவரையிலும் அரசுக்கு அரசு வேறுபடும்; கிரேக்க அரசியல் நூல் புலவர் அரிஸ்டாட்டில் அரசாங்கங்களை முடியாட்சி, பிரபுக்களாட்சி, செல்வராட்சி, ஒற்றை மனிதருடைய சர்வாதிகார ஆட்சி, மக்களாட்சி என வகைப்படுத்தினர். ஓர் அரசு இவ்வகை அரசாங்கங்களுள் ஏதாவதொன்றை ஏற்றிருக்கலாம்; ஆனால் அது சுதந்திரமாக இருக்குமாயின் அது அரசுதான். கிரேக்கநாட்டில் ஆதென்ஸ் நகரரசில் (City-State). 384-க்கும், கி.மு. 322-க்கும் இடையே வாழ்ந்தவர் அரிஸ்டாட்டில். இவருடைய ஆசிரியர் பிளேட்டோ, இவருடைய ஆசிரியர் சாக்ரட்டீஸ் ஆகியோருடைய அரசியற் கருத்துக்களே இக்கால ஐரோப்பிய அரசியற் கருத்துக்களுக்கு ஆதாரம் ஆகும். இந்த அரசியற் சிந்தனையாளர்களெல்லாம் “அரசு என்ற அமைப்பு ஏதோ தெய்வத்தின் ஆணையால் தோன்றிய” ஒன்று

என்று கருதவில்லை. மாறாக அரசு என்பது மனிதனுடைய சமுதாய உணர்வு என்னும் இயல்பினின்றும் தோன்றியது. எனவே மனிதனின் நலத்தின் பொருட்டு தக்க சட்டங்களை இயற்றி, செயல்படுத்தி, அதை ஒட்டி நீதி வழங்குதல் வேண்டும் என்றும்; ஆகவே அது வகுக்கும் நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டும், மேலே கூறப்பட்ட அதன் செயல்களில் அவன் பங்கு கொண்டும் மனிதன் செயல்படவேண்டுமென்றும் கருதினர். இதுவே இக்கால அறிவியல் நோக்கில் அமைந்த அரசியல் கருத்து ஆகும். அறிவியல் நோக்கில் எழுந்த இந்த கிரேக்க சிந்தனையாளர்களுடைய அரசியற் கருத்தே, அரசனும் அல்லது ஆளுவோரும் ஓர் மனிதனே, அவன் தெய்வம் அல்லன். ஆகையால் அவனுடைய ஆட்சி அதிகாரம் மக்களிடமிருந்து வருகிறது; அந்த அதிகாரத்துக்கு வரம்பு (அதாவது சட்டமென்னும் வரம்பு) இருக்கிறது. ஆகையால் சமுதாய நலனுக்குப் பொறுப்பேற்று ஆளுபவன் ஆளுதல் வேண்டும். என்னும் மக்களாட்சிக் கருத்துக்கள் தோன்றுவதற்கு ஏற்ற ஊற்றுக்கண்களாக அமைந்தன என்று கூறலாம். ஆளுவோன் அதிகாரத்தைத் தவறாகச் செலுத்தாதவாறு தட்டிக்கேட்க குடியாளுக்கு உரிமை உண்டு; இவ்வுரிமை திறம்படக் கையாளப்படுதல் வேண்டுமாயின், ஒவ்வொரு குடியாளும் அரசாங்கத்தில் ஏதாவது ஒரு பங்கை ஏற்றுச் செய்தல் வேண்டும், அவ்வாறு பங்கு எடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கி இருக்கும் குடியாள், ஒன்று வானுலகவாசியாக இருத்தல் வேண்டும். அல்லது அரசே தேவைப்படாமல் காட்டில்வாழும் விலங்கினங்களுள் ஒன்றாக இருத்தல் வேண்டும், என்று அரிஸ்ட்டாட்டில் கூறுகிறார். ஆளுபவனுடைய தவற்றைச் சுட்டிக்காட்டும் குடியாளுடைய சீரியபணியை அரிஸ்ட்டாட்டிலைப் போல திருவள்ளுவரும் "பெரியோரைத் துணைக் கோடல்" என்னும் அதிகாரத்தில் குறள் 448 – இல்,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்"

என்று சுட்டிக்காட்டுகிறார். திருவள்ளுவர் கூறும் மன்னன் என்ற சொல்லை ஆளுவோன் என்ற விரிந்த பொருளில் கொண்டால், அவரும் அரிஸ்ட்டாட்டிலை ஒத்த ஒரு மக்களாட்சி அரசியற் சிந்தனையாளர் (a democratic political thinker) ஆவார் என்று நாம் துணிந்து கூறலாம். எனவே குடிகளுக்கு எத்தகைய நன்மைகளை ஆளுவோன் செய்தாலும், அவன் எதேச்சாதிகாரம், அல்லது சர்வாதிகாரம் அல்லது குடிகளின்

உரிமைகளை மதிக்காமல் வரம்பற்ற அதிகாரம் செலுத்துவதற்கு உரியவனல்லன் என்பது வெளிப்படை. இந்த மக்களாட்சி அரசியற் கருத்து ஆங்கில மக்கட் சமுதாயத்தில் பழங்காலத்திலிருந்தே வேரூன்றி வளர்ந்திருப்பதால், அங்கு அரசர் அல்லது அரசி பெயரளவிலேனும் அரசியலமைப்பில் இடம் பெற்றிருந்தாலும், அங்கு நடைமுறையில் இருப்பது பாராளுமன்ற மக்களாட்சி முறையே ஆகும்.

## 2. பண்டைக்கால இந்திய ஆட்சிமுறைகள்:

பண்டைய இந்தியாவில் தமிழகத்திலும், வட இந்தியாவிலும் இருந்த அரசுகளில் முடியாட்சிமுறையே இருந்தது. தமிழக அரசு சிற்றூர் ஒவ்வொன்றிலும் அறங்கூறு அவையம் இருந்தது என்று தெரிகிறது; அக்காலத்திய வழக்கங்களைப் பின்பற்றி இந்த அவையம், உறையூரில் வழங்கிற்று என்று புறநானூறு பாட்டு 39, அகநானூறு பாட்டு 93, கற்றிணை பாட்டு 400 ஆகியவை தெரிவிக்கின்றன; இந்த நீதிவழங்கும் அவையத்து உறுப்பினர் ஊர்ப்பொதுமக்களடங்கிய மாசபையால் மக்களாட்சி முறையின்படி குடவோலைவாயிலாகக் கடைச் சங்ககாலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இதை அகநானூறு 77 ஆம்பாட்டு.

"கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டழிக்கும் ஆவண மாக்களின்"

என்று கூறுகிறது. தொல்காப்பியம் புறத்திணை இயல் சூத்திரம் 17,

".....
எட்டுவகை நுதலிய அவையகத்தானும்

என்று கூறுகிறது. இவை எல்லாம் வடநாட்டு ஆட்சிமுறைகளின் தொடர்பு இல்லாமல் தமிழக உள்ளூர் மன்றங்களில் மக்களாட்சிக் கருத்தின்படி நீதி வழங்குதல், பொதுவான பணிகளைச் செய்தல் முதலிய செயல்கள் நடைபெற்றன என்று தெரிவிக்கின்றன. இந்திய நாட்டின் அரசு ஒவ்வொன்றிலும் இருந்த முடியாட்சி முறையில் கிரேக்க நாட்டுக் கருத்து எதுவும் காணப்படவில்லை; தமிழகத்தில் உள்ளூர்மட்டத்தில் இயங்கிய ஆட்சி அமைப்பில் குடவோலை வாயிலாக ஆட்சியில் பங்கு கொள்ளுதற்கு ஊர் மக்களுக்கு வாய்ப்பு இருந்தது; ஆனால் மேல்மட்டத்தில் ஆட்சியில் பங்கு கொள்ளுவதற்கு நாட்டு மக்களுக்கு வாய்ப்பு இல்லை; ஆயினும் அரசர்கள் கொடுங்கோலர்களாக மாறி மக்களைத் துன்புறுத்தாவண்ணம், அவர்களுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டி

இடித்துரைத்து நல்ல தொண்டு செய்த உறையூர் முதுகண்ணன் சாத்தனார், (புறம் 28, 29), கோவூர்கிழார் (புறம் 32, 44, 45), மதுரை மருதன் இளநாகனார் (புறம் 55), காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (புறம் 58), ஔவையார் (புறம் 367) முதலிய கடைச் சங்ககாலப் புலவர் பெருமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இது காறும் கூறியவாற்றால், பண்டைய தமிழ்நாட்டிலும் வடநாட்டு அரசுகளிலும் முடியாட்சி நடைபெற்றதனால், அதில் மக்களுக்குப் பங்கு இல்லையென்றும், குடிமக்கள் அரசனது ஆணைகளுக்குக் கட்டுப்படுமளவிலேதான் பங்கு ஏற்றனரென்றும், உள்ளூர்ப் பிரிவுகளில்

---

1. அவர்கள் கூறிய அறிவுரைகள்:

புறம் 28 அறமும், பொருளும், இன்பமும் செய்வதற்கு உதவும் மன்னனுடைய செல்வம் உதவாதொழில் அவனைப் பாதுகாவாது.

புறம் 29 படைகொண்மாக்களும் முறை முதலாயின தப்பாமற் செய்து இன்புற்றிருக்குமாறு சிறப்புச் செய்தல் வேண்டும்.

புறம் 32 பரிசில் மாக்களால் பாடப்பெறும் தகுதியும் ஈகைப்பண்பினால் வரும்.

புறம் 34 (ஆலத்தூர்க்கிழார்): ஒருவன் செய்த நன்றியைக் கொன்றோர்க்கு உய்தி இல்லை என்று அறநூல் கூறுகிறது; அவர் மறுமையில் நரகம் புகுவர்.

புறம் 35 அரசனுடைய வெண்கொற்றக்குடை, வெயிலை மறைத்தற்குக் கொண்டது அன்று, வருத்த முற்ற நிழல் செய்தற்காகக் கொள்ளப்பட்டது. பஞ்ச காலத்தில் இயல்பல்லாத் செயல்கள் மக்களுடைய தொழிலிலே தோன்றினாலும் உலகர் காவலரையே பழித்துரைப்பர்; இதனை அரசன் நன்றாக உணர்ந்து குறளை கூறுவாரது வார்த்தையை உட்கொள்ளாது, ஏருழவரைப் பாதுகாத்து ஏனைக் குடிகளையும் பாதுகாத்தல் வேண்டும் (வெள்ளைக்குடிநாகனார்).

புறம் 44 அறத்தை உடைய அரசன் தன் நாட்டைப் பாதுகாத்தல் வேண்டும், உறையூரை முற்றுகையிட்டிருந்த சோழன் நெடுங்கிள்ளியையும், அதனுள் அடைத்திருந்த சோழன் நலங்கிள்ளியையும் பார்த்துக் கோவூர்கிழார் கூறியது: 'நீங்கள் எவரும் சேரனுமல்லன், பாண்டியனுமல்லன், சோழர் குடியைச் சேர்ந்தவர்களே; ஆதலால் நும்முள் ஒருவர் தோற்பினும், தோற்பது நும்குடியன்றோ? வெல்லுநர் இயல்புமன்று, ஆதலால் நுமது குடிக்குத்தக்கதன்று நும் செய்கை; இம்மாறுபாடு உம்மைப்போலும் வேந்தர்க்கு, உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும்; ஆதலால் இது தவிர்தலே நுமக்குத் தக்கது.''

புறம் 55 அரசனது வெற்றி அறஞ்சார்ந்த செயலைப் பொறுத்தே அமையும், அதனால் அவன், இவர் நம்மவரென்று அவர் செய்யும் கொடுந்தொழிலைப் பொறுத்து கோல்வளையாமலும், இவர் நமக்கு அயலாரென்று அவர் நற்குணங்களைக் கெடாமலும், ஞாயிற்றைப் போன்ற வீரமும், திங்களைப் போன்ற மென்மையும், மழையைப் போன்ற வண்மையுமுடையவனாக வாழ்தல் வேண்டும்.

continue to next page

ஊரவையில் குடவோலை முறையைப் பின்பற்றி ஊர்மக்கள் ஊர்ப் பொதுப் பணிகளை ஏற்குமளவுக்குப் பங்கு பெற்றிருந்தனரென்றும் அறிகின்றோம்.

## 3. மக்களாட்சி என்பதன் பொருள்: அது திறமாக வளருவதற்கு இன்றியமையாது வேண்டும் காரணிகள்:

நம் நாட்டில் ஆங்கிலேயருடைய ஆட்சிமுறை நிறுவப்பட்ட பின்னரே கிரேக்க, ரோமானியருடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட அரசியற்கருத்துக்களும், சட்ட மன்றம், நிர்வாகம், நீதித்துறை முதலிய 'அரசாங்கக் கூறுகளும், நம் நாட்டவரிடை வெகுவாகப் பரவின. குடிமக்களின் தொழில்முறைகள், சமூக அமைப்பு, நாட்டின் நிலப்புரப்பு முதலியவற்றைப் பொறுத்த அளவிலே இக்கால நாட்டு அரசு (Country State), கிரேக்க நாட்டிலிருந்த நகரரசினின்றும் (City-State) வேறுபட்ட ஒன்று. ஆகையால் இக்காலத்தில் குடிமக்கள் யாவரும் நேராகப் பங்கு கொள்ளுதல் இயலாது, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவே பங்கு கொள்ளுதல் இயலும். நகரரசில் நடைபெற்றது நேர்முக மக்களாட்சி (Direct Democracy) இக்காலத்தில் நடைபெறுவது பிரதிநிதிகளின் மக்களாட்சி (Representative Democracy) இந்த வகையில் நாம் மக்களாட்சி என்ற முறைக்குப் பின்வருமாறு பொருள் கூறலாம்.

> "ஒரு நாட்டின் குடிமக்கள் (அல்லது குடியாட்கள்) தாங்களே நேராகவோ, தங்களால் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும்

---

புறம் 58 சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் நண்பர்களாக ஒருங்கிருக்கக் கண்டு காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் சொல்லிய வாழ்த்து: நீங்கள் இருவரும் இரு பெரிய நாடுகளை ஆளும் புகழ் மிக்க அரசர்கள், இரு பெரிய தெய்வங்கள் ஒருங்கு நின்றாற் போலப் பகைவர் அஞ்சுமாறு இருக்கும் இந்தக் காட்சியை விட இனிய பொருள் உளதோ? நீங்கள் இவ்வாறு வேறுபடாமல் ஒருங்கு நின்றால் உலகம் உங்கள் கையகப்படும்; ஆதலால் நல்லனபோலே இருக்கவும். நியாயத்தைப் போலே இருக்கவும், பழையோரொழுகிய ஒழுக்கத்தைப் போலே இருக்கவும், அன்பு பொருந்திய நெஞ்சையுடைய நும் இடையே புகுந்து நும்மைப் பிரித்தற்கு அலமரும் அயலோருடைய சிறப்பில்லாத மொழியைக் கேளாது இன்று போல்க நுமது கூட்டம். இதேபோல பெண்புலவர் ஔவையார் புறம் 367 - இல் சேரன் மாரிவெண்கோ, சோழன் இராச சூயம் வேட்டபெருநற்கிள்ளி, பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆகியோர் ஒருங்கிருக்கக் கண்டு 'மூவரும் ஒருங்கிருத்தல் புகழத்தக்கது, நீங்கள் நெடிது வாழ்க' என்று வாழ்த்தினர்.

நரிவெரூ உத்தலையார், கணியன் பூங்குன்றன் ஆகியோர் பாட்டுக்களிலும் யாவருக்கும் பொதுவான அறிவுரைகள் காணப்படுகின்றன.

தங்களுடைய பிரதிநிதிகளின் வாயிலாகவோ நாட்டை ஆளும் அதிகாரத்தைக் கையாளுவாராயின் அத்தகைய அரசாங்கவகை மக்களாட்சி ஆகும்."

இத்தகைய அரசாங்க வகை ஏற்படுவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் காரணிகளாவன:

(1) குடிமக்கள் யாவருக்கும் குடிமை உரிமைகளும் (civil rights) பொருளாதார உரிமைகளும் **அரசியல் உரிமைகளும்** இருத்தல் வேண்டும்.

அரசியல் உரிமைகளாவன:

(a) பொதுவாக சில தகுதிகளுக்கு உட்பட்டு வயது வந்தோர் யாவருக்கும் சட்ட மன்றத் தேர்தல்களில் வாக்கு அளிப்பதற்கும், அவற்றில் வேட்பாளராகிக் கலந்து கொள்ளவும் உரிமை;

(b) *அரசியலமைப்புச் சட்டத்தில்* (Constitution) கூறப்பட்டவாறு நாட்டின் சட்டமன்றங்களுக்கு அவ்வப்போது பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு உரிமை. தேர்தல்களை நடத்தாமலும், உறுப்பினர்களை அமர்த்தியும் ஆளுதல் சர்வாதிகாரமே ஆகும்.

(c) நிர்வாக (administrative), நீதித்துறை அலுவல்களைச் செய்வதற்கு உரிய தகுதி உடையவர்கள் அவ்வலுவல்களை அடைவதற்கு ஒத்த உரிமை;

(d) பேச்சு உரிமை, கருத்துக்களை வெளியிடும் உரிமை பொதுப்பணிகளைப் பற்றி ஒருமித்த கருத்து உடையோர், ஒரு அரசியல் கட்சியாக அமைந்து (political party), பணிகளைச் செய்தற்கு ஆட்சியைக் கைப்பற்றுதற்காகப் பொதுமக்களுடைய ஆதரவைத்தேடும் உரிமை.

(e) மேற்கூறிய உரிமைகளெல்லாம் மக்களாட்சிமுறையில் குடிமக்களுக்கு இருக்கவேண்டிய இன்னொரு சிறப்பான உரிமையைக் குறிப்பிடுகின்றன. அதுவே, **ஆட்சியாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், சுட்டிக்காட்டும் தவறுகளை நீக்கிக் கொள்ளாமல் தொடர்ந்து தவறுசெய்து மக்களுக்குத் தீங்கு செய்வாராயின், அந்த அரசாங்கத்தை, (நம்பிக்கை இல்லாத்தீர்மானங்களின் மூலம்) நீக்கிவிட்டு வேறொரு தக்க அரசாங்கத்தை அமர்த்துவதற்குக் குடியாட்களுக்கு உள்ள உரிமைதான்.** (இதுவே மக்களாட்சி முறையை சருவாதிகார

முறையினின்று வேறுபடுத்திக்காட்டுகிறது)[2] "சுதந்திரவிருப்பத்தை அல்லது இயல்பை உடைய கிரேக்க மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் மக்களாட்சி முறையில் வாழ்பவர். ஆகையால் அவர்களே சுதந்திர இயல்பை ஆதாரமாக உடைய மக்களாட்சிமுறையை அறியாது. சர்வாதிகார முடியாட்சியில் வாழும் பாரசீக மக்களையும், அவர்களைப் போன்ற பிறநாட்டவரையும் விட நாகரிகத்தில் உயர்ந்த மக்கள், ஏனையோர் காட்டுமிராண்டிகள் (!)" என்பார் அரிஸ்ட்டாட்டில். (இக்கருத்து முழு உண்மை அன்று)

2. மேற்கூறிய உரிமைகளைத் தவிர, **வேறுசில சூழ்நிலைகளும்** இன்றியமையாது வேண்டப்படும் காரணிகளாகும்.

(a) **விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை:** சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் (பொதுவான) சில உரிமைகள் இருக்கின்றன; ஆகையால் ஒவ்வொருவரும் மற்றவருடைய உரிமைகளை மதித்தால்தான், ஆட்சியில் பங்கு கொள்ளுதற்கு வாய்ப்பும், வல்லந்தப் புரட்சி ஏதும் இன்றி, அமைதியான வழியில், ஆட்சியை மாற்றவோ, அமர்த்தவோ இயலும். நடைமுறையில் வெற்றியாக மக்களாட்சி செயல்படுவதற்கு வேண்டிய கருத்தொருமை ஏற்படும் தவற்றைச் சுட்டிக்காட்டும் சட்டமன்ற எதிர்க்கட்சியாரைப் பகைவரென்று ஆட்சியிலுள்ள கட்சியார் கருதி ஒடுக்குதல் கூடாது. குற்றச்சாட்டை ஆய்ந்து, உண்மையாயின் திருத்திக்கொண்டு, எதிர்க்கட்சியாருக்கும் ஆட்சியில் பங்கு உண்டென்ற உரிமையை ஆட்சியாளர் மதித்தல் வேண்டும். எனவேதான் இருவகையாருக்கும் **ஒத்த மதிப்பைக் கொடுத்து**, *பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்* ஆளுவோரை மாட்சிமை தங்கிய அரசர் (அல்லது அரசியாருடைய) அரசாங்கம் என்பதுபோல, (His or Her Majesty's Government), முக்கிய எதிர்க்கட்சியை மாட்சிமை தங்கிய அரசர் அல்லது அரசியாரின் எதிர்க்கட்சி (His or Her

---

2 "மக்களாட்சி முறை சுதந்திரமான பொதுத் தேர்தல்களின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்ட மக்களுடைய விருப்பத்தை அடிப்படை யாகக் கொண்டு அமைந்துள்ளது; சருவாதிகார ஆட்சிமுறையோ வல்லந்தத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட அச்ச உணர்வை அடி ப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. பிரிட்டிஷ் மக்களாட்சிமுறை மக்களின் ஒப்புதல் (popular consent) எனும் ஆதாரத்தை உடையது. உலகில் பல்வேறு நாடுகளில் இயங்கும் இராணுவசர்வாதிகார ஆட்சிமுறைகள் வல்லந்தம் (force) என்னும் ஆதாரத்தை உடையவை" (இராம்சேமூர்)

Majesty's Opposition) என்று குறிப்பிடும் மரபைப் பின்பற்றுகின்றனர். எதிர்க்கட்சியாரும் ஆளுவோரின் செயல்களையே இடித்துக் கூறுதல் வேண்டும், அவர்களை நீக்குதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளுதல் கூடாது.

(b) முக்கியமாகப் **பொருளாதாரத் துறையில் குடிமக்களிடையே பெருமளவில் சமத்துவமின்மை அல்லது ஏற்றத்தாழ்வு இருந்தலாகாது:** ஏற்றத்தாழ்வுகளை முற்றிலும் நீக்குதல் இயலாதாயினும், நடைமுறைக்கேற்றவரையிலேனும் நீக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு நீக்கப்படாவிட்டால், சமத்துவமில்லா நிலைமை வளர்ந்து, மக்களாட்சி வடிவத்தில் செல்வச் சிறுகுடியினராட்சி தோன்றுமென்றும், அதை ஒழிப்பதற்காக வல்லந்தப்புரட்சியும், அதை அடுத்து சர்வாதிகார ஆட்சியும் தோன்றுமென்றும், உண்மையில் அரசியல் சமுதாயங்களில் புரட்சிகள் தோன்றுதற்கு ஒரு வலுவான காரணம் சமத்துவமின்மையே ஆகும் என்றும், சுதந்திர அரசுகளில் குடிமக்களுடைய இயல்பான விருப்பம் சமத்துவநிலையை அடைவதே என்றும், சிந்தனையாளர் அரிஸ்ட்டாட்டில் கூறுவர்.

(c) யாவரும் தங்களுடைய உரிமைகளைப் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ளுதற்கு வசதியாக **யாவருக்கும் இலவசத் தொடக்கக்கல்வி, வேலையில்லாநிலைக்கு எதிராகப் பாதுகாப்பு**, ஆட்சியாளருடைய விருப்பத்தைச் சாராமல், நாட்டின் பொதுவான சட்டத்தைப் பின்பற்றி நீதி வழங்கும் **சுதந்திர நீதித்துறை** (Independence of the Judiciary), சுதந்திர நீதித்துறையின் வாயிலாக எதேச்சாதிகாரத்துக்கு எதிராக, **மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு, அரசியலைப்புச் சட்டத்தை** ஒவ்வொருவரும் உணர்தற்கேற்ற **கல்விப்பயிற்சி** ஆகியவையும் மக்களாட்சியின் வெற்றிக்கு வேண்டப்படும் காரணிகளாம். "குடிமக்கள் நாட்டின் அரசியலமைப்பை உணரத்தக்கவாறு அவர்களுக்குக் கல்விப்பயிற்சி இருக்குமாயின் அதுவே புரட்சிகள் தோன்றுவதற்கு எதிரான ஒரு வலிய தடுப்பு ஆகும்." என்பார் அரிஸ்ட்டாட்டில்.

(d) நல்லதிறமையும், தன்னலமற்ற தொண்டு மனமும் உடைய **தலைவர்களும்** மக்களாட்சியின் வெற்றிக்கு வேண்டப்படும் காரணி ஆகும். மக்களாட்சிக் கொள்கையில் நம்பிக்கை, அந்த மரபில் பயிற்சி, கல்வி அறிவு முதலியவை உடையோரே மக்களாட்சியில் தலைவராக வருவதற்குத் தக்கவர் ஆவர்.

இந்த மக்களாட்சி இயல்புகள் எவ்வாறு பிரிட்டனில் தோன்றி வளர்ந்து இன்றைய வடிவத்தில் உள்ளன என்று அடுத்துக் காண்போம்.

# நிறையும் குறையும்

பேரறிஞர் செ. இராஜேஸ்வரி

ஏ.கே. இராமானுஜன் தமிழிலக்கியங்களை ஆங்கில மொழிக்கு மொழி பெயர்த்து 'உலகமெலாம் தமிழோசை பரவச் செய்த' பெருமகனார். அவருடைய மொழி பெயர்ப்புகளைப் படித்துச் சுவைக்க அமெரிக்கர்கள் மேலும் ஆர்வம் கொண்டு மூலமொழியில் அவ்விலக்கியங்களைப் படித்துத் தெளிந்தனர். இதுவே இவர் இத்துறையில் ஆழங்காற்பட்டவர் என்பதற்குச் சான்றாகும்.

விடுநிலைப்பா வடிவில் செய்யப்பட்ட இம்மொழிபெயர்ப்புகள் எளிய, இனிய நடையில் அமைந்து கற்போரின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஒரு மொழி பெயர்ப்பு நிலைபெற வேண்டுமானால், அந்நூல் மொழி பெயர்க்கப்படும் காலத்திற்குரியதாக (அவசியத்திற்குரியதாக) இருக்க வேண்டும் என்பார் ரூபன் புரௌவர் எனுமறிஞர். மேலும் 'காலத்திற்குரிய நடையோடு தமக்கென்றொரு தனிநடையும் பெற்று ஒரு மொழி பெயர்ப்பு இலக்கிய வெற்றியைப் பெறவேண்டும் என்ற இவ்வறிஞரின் கருத்திற்கு ஏற்றதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்வது ஏ.கே. இராமானுஜன் அவர்களின் மொழிபெயர்ப்பு.

திறனாய்வு நோக்கில் இக்கட்டுரை ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு போல என்று ஒரு நிறையையும், யானைக்கும் அடி சறுக்கும் என்பதற்கிணங்க ஒரு குறையையும் விளக்குகிறது.

ஏ.கே. இராமானுஜன், ஜி.எல்.ஹார்ட், கமில் சுவலபில் போன்றோர் சங்க இலக்கியங்களை விடுநிலைப்பா வடிவில் மொழிபெயர்த்துள்ளனர். அகப்பாடல்களின் கட்டு முறையைப் பெறு மொழியில் உணர்த்துவதற்கு இவ்விடுநிலைப்பா வடிவம் பலருக்கு உதவியிருக்கிறது.

விடுநிலைப்பா மொழிபெயர்ப்பு. யாப்புக் கட்டுகளிலிருந்து விடுபட்டதாகும். இப்பாவடிவைத் தியோடர் சேவரி 'Prose Poetry' அல்லது

'Poetic Prose' என்று அழைப்பார். அடி வரையறை, அசைக் கட்டுப்பாடு, ஒலி இயைபு ஆகியன இப்பாவகைக்கு இல்லை. எனினும் இதனால் மூலபாடக் கவிதையின் பொருளையும் அதன் இயக்கத்தையும் அதே பொருளிலும் அதே முறையிலும் அடுத்த மொழிக்கு பெயர்த்தளிக்க முடியும். எனவே யாப்புச் சிக்கலுக்குக் கவிதை மொழிபெயர்ப்பில் இஃது ஒரு தீர்வாக அமைந்தது.

விடுநிலைப்பா அளிக்கும் கவிதைப் பொருளும் அதன் இயக்கமும் பெறுமொழி வாசகர் படிக்கும் போது அவருக்கு மூல நூலைப் படிக்கும் தூண்டுதலை ஏற்படுத்தும். இம் மொழிபெயர்ப்பு படிப்பதற்கு ஒரு புதிய நூலாக, புதிய முயற்சியின் விளைவாகத் தோற்றம் அளிக்கும்.

விடுநிலைப்பா மொழிபெயர்ப்பு மிகுந்த துல்லியத்தையும் அதிகபட்ச இலக்கிய நயத்தையும் பெற்றிருப்பதாக ஆண்டுரு லெஃமிவெரெ கருதுகிறார்.

மொழிபெயர்ப்பாளர்கள் கவிதை மொழிபெயர்ப்பில் கவிதைக் கூறுகளை மொழிபெயர்க்கும் போது பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவற்றைத் தம் கவித்திறனாலும் மொழிப்புலமையாலும் தீர்க்கின்றனர். நுவல் பொருளுக்கு ஏற்ப ஒலிகளை அமைக்கும் பாங்கினை 'ஒலி வண்ணம்' என்பர். ஒலி நயமுடைய மூலமொழிச் சொற்களுக்கு நிகரான பெறுமொழிச் சொற்களைத் தேர்ந்தெடுப்பது 'நடை நிகரன்' களை அமைக்க உதவும். இந் நிகரன்கள் மூலமொழியின்பத்தை மொழிபெயர்ப்புக்கும் அளிக்கும்.

சான்றாக

**"குறு குறு நடந்து, சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்"**

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் இடம்பெறும் றகர, டகர ஒலிகள் குழந்தையின் தளர் நடையையும் துடிப்பையும் காட்ட வல்லன. ஏ.கே.இராமானுஜன், இதனை,

**"Who patter on their little feet**
**stretch tiny hands**

**scatter, touch**
**grub with mouths, and**
**grab with fingers"**

என மொழிபெயர்த்துள்ளார் 'குறு குறு' என்பதன் ஒலி நயத்தை 'Patter little' என்ற சொற்களாலும் 'சிறுகை நீட்டி' என்பதனை 'Stretch tiny' என்பவற்றிலும் காணலாம். அடுத்த அடியில் 'இட்டும் தொட்டும்' என்ற தொடரில் இடம்பெறும் டகர இரட்டிப்பு ஒலியையும் உம்மை நயத்தையும் 'grub with, grab with' என்பவற்றிலும் மொழிபெயர்ப்பாசிரியர் அமைக்க முனைந்துள்ளார் நடை நிகரன்களை ஏ.கே. இராமானுஜம் தேர்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நடை நிகரன்கள்தாம் மொழி பெயர்ப்புக்கு அழகியல் தன்மையை அளிக்கின்றன. நடைநிகரன்கள் அமையாவிடில் இம்மொழி பெயர்ப்பு வெறும் செய்தியாக மட்டுமே அமைந்திருக்கும். நடா இத்தகு செயற்பாட்டு நிகரனைப் (functional equivalent) பெறுமொழிப் பண்பாட்டிற்கு ஏற்ப கண்டறியப்பட்ட நிகரன் என வரையறுக்கிறார். மேலும் இஃது இயக்க நிகரனுடன் ஒத்து நோக்கற்குரியது என்றும் கூறியுள்ளார். தமிழிலும் காணப்படும் இயங்கியல் தன்மையை (dynamism) பெறுமொழியும் பெறுவதற்கு ஏ.கே. இராமானுஜம் தேடி அமைத்த நிகரன்கள் கவிதை மொழி பெயர்ப்பின் தகுதியை மேலும் உயர்த்துகிறது.

**உவமை நயம்:**

உவமையில்லாக் கவிதை உப்பில்லாப் பண்டம் போன்றது என்பர். கவிதைக்கு அணியாவது உவமை. இத்தகைய சிறப்புடைய உவமையை மொழிபெயர்ப்பதில் ஏ.கே. இராமானுஜனுக்கு ஏற்பட்ட குறையைக் காண்போம்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ' என்ற குறுந்தொகைப் பாடலின் இறுதியடிகளில் இடம்பெறும் உவமைத்தொடர் ஆங்கில மொழிபெயர்ப்பில் உம்மைத் தொடராக மாற்றம் பெற்றுள்ளது.

தலைமக்களின் உள்ளப் புணர்ச்சியை செம்புலத்தில் பெய்த நீருக்கு உவமித்துள்ளது. இவ் உவமையின் மையப் பொருள் தலைமக்களின் உள்ளக்

கலப்பு. உவமிக்கப்படும் நீரின் வண்ணம் செம்மை. இச்செம்மையை எஞ்ஞான்றும் மாற்ற இயலாது என்பதை உணர்த்த

**'செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே'**

என்று கவிஞர் பாடியுள்ளார்.

**'Our hearts have mingled**
**Like red earth and pouring rain'**

என மொழிபெயர்த்துள்ளார். மூல மொழியில் உவமை 'நீர்' மட்டுமே. அந்த நீர் செம்புலத்தில் பெய்த மழை நீர். ஆனால் மொழிபெயர்ப்பில் செம்புலமும் பெயல் நீருமாய இரண்டினையும் 'and' என்ற இணைப்புச் சொல்லிட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

உவமைப்பொருள் மாறுபட்டு விரிவடைந்த நிலையில் மொழிபெயர்ப்பில் அமைந்திருப்பது பெறுமொழி வாசகர் மூலநூற் சுவையைப் பெறத்தடையாக நிற்கும். இக்குறையைத் தவிர்க்க இயல்பான, ஏற்புடைய, நெருங்கிய, துல்லியமான நிகரனைத் தேர்வு செய்வதே முறையான முயற்சியாகும்.

**Our hearts have mingled earth**
**Pouring rain in red earth**

என்று அமைத்தால் செம்புலத்தில் பெய்த மழை நீர் போல நம் உள்ளங்கள் கலந்தன என்ற பொருள் தெளிவுறப் பெறுமொழி வாசகர்க்குக் கிட்டும். உவமையின்பமும் குறைவின்றிச் சென்று சேரும்.

நிலவுக்கும் மறு உண்டு என்பது போல மிகச் சிறந்த தேர்ந்த மொழிபெயர்ப்பாளரான ஏ.கே. இராமானுஜம் அவர்களுக்கு இக்குறை நேர்ந்திருக்கிறது. நிறையும் குறையும் உடைய மனித வாழ்க்கை போலவே மொழி பெயர்ப்புத் துறையும் அமைந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. திறனாய்வை ஆக்க ரீதியில் கருத்திற் கொள்வது இனிவரும் மொழி பெயர்ப்புகளில் நிறைகளே பெரிதும் விளங்க உறுதுணையாய்த் திகழும் அன்றோ?

# முல்க்ராஜ் ஆனந்து

- பேரறிஞர் ஜி.ஆர். கிரிஜா

சுதந்திரப் போராட்டம் நடந்த முப்பதுகளிலும், நாற்பதுகளிலும் பாரதத்தில் நிகழ்ந்த முரண்பாடான சமுதாயச் சூழலைப் படம்பிடித்துக் காட்டிய நாவலாசிரியர்களில் முல்க்ராஜ் ஆனந்தும், ஆர்.கே.நாராயணனும் முதன்மையானவர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்கள் ஆங்கில மொழியைத் தம் நாவல்களில் கையாள்வதில் மிகத் திறமைசாலிகள் என்பதை வார்த்தைகளால் கூட வருணிக்க முடியாது. அவ்விருவரில் முல்க்ராஜ் ஆனந்தின் மொழிநடையும், சமுதாயத்தின் மீது அவர் கொண்ட ஈடுபாடும் பார்வையும் மகிழத்தக்கவை.

பஞ்சாபில் பெசாவர் என்ற ஊரில் 1905 டிசம்பர் 12 ஆம் தேதி ஒரு சாதாரண பித்தளைப் பாத்திரம் செய்யும் தொழிலாளி குடும்பத்தில் பிறந்தார். அவர் தம் தந்தை இலால் சந்த் ஆனந்த் என்பவர் ஆங்கிலேய இராணுவத்தில் தலைமை எழுத்தாளராகப் பணிபுரிந்தார். ஆனந்தின் தாயார் ஈஸ்வர்கவுர் என்பவர் கல்வியறிவில்லாத மூடநம்பிக்கையில் ஊறிப்போன ஒரு கிராமத்துப் பெண்மணி. சிறுவன் முல்க்ராஜ் ஆனந்து மனத்தில் அவரின் தாய் தீண்டத்தகாதவர் மீது கொண்ட வெறுப்பு ஆழப்பதிந்துவிட்டது. பிற்கால நாவலாசிரியரான முல்க்ராஜ் ஆனந்தின் படைப்புக்களில் அதன் தாக்கம் காணப்பட்டது. மேலும், சிறுவயதில் தாயார் கூறிய பல புராண, இதிகாச, நாட்டுப்புறக்கதைகள் பிற்கால நாவலாசிரியரான முல்க்ராஜ் ஆனந்திற்கு உதவின.

இளம்வயதில் தம் ஊரிலேயே துவக்கக் கல்வியை முடித்துவிட்டு, அமிர்தசரசிலுள்ள 'கல்சா' கல்லூரியில் பி.ஏ., முடித்தார். முதல்வரின் தூண்டுதலினாலும், தாயாரின் உதவியாலும் இங்கிலாந்திற்கு பி.எச்.டி படிக்கச் சென்றார். 1935 இல் தத்துவத்துறையில் பி.எச்.டி பட்டம் பெற்றபின், பல ஆண்டுகள் அங்கேயே தங்கி டி.எஸ். எலியட் போன்ற பல ஆங்கில அறிஞர்களோடு நெருங்கிப் பழகினார். பல ஆங்கிலக் கட்டுரைகளை ஆனந்து எழுத இச்சந்திப்புக்கள் வாய்ப்பளித்தன.

இங்கிலாந்தில் இருக்கும்போதே தீண்டத்தகாதவர் (Untouchable) என்ற நூலை எழுதினார். காந்தியடிகளின் 'யங் இந்தியா' என்ற இதழில் இந்திய மக்களின் நிலைமை பற்றிப் படித்தார். இந்தச் சூழ்நிலையில் தாம் இந்தியாவில் இருப்பது நல்லது என்ற முடிவுடன் இந்தியா திரும்பினார்.

தீண்டத்தகாதவர் என்பது இவரது முதல் புதினம். இலக்கியங்களிலேயே முதன்முதலில் தீண்டாமையைச் சித்திரித்த புதினம் இதுவே என்றும் கூறலாம். இந்தப் புதினத்தை 19 வெளியீட்டாளர்கள் வெளியிட மறுத்தனர். இறுதியில் 'விசாட்' என்ற வெளியீட்டு நிறுவனம் 'E.M. பாஸ்டர்' என்ற புகழ்மிக்க ஆங்கில எழுத்தாளரின் முகவுரையுடன் வெளியிட்டது.

தீண்டத்தகாதவர் ஒரு தோட்டியின் கதைபற்றியது என்ற காரணத்தினால் பலர் அதனை வெளியிட மறுத்தாலும் இறுதியில் மிகச்சிறந்த வரவேற்பைப் பெற்றது. இக்கதையின் முக்கிய பாத்திரமான "பக்கா" (Bakha) நம் மனத்தைவிட்டு நீங்காத பாத்திரம். இப்பாத்திரத்தின் மூலம் அரிசன மக்களின் நிலை படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து "கூலி" என்ற புதினம் வெளிவந்தது. ஆலைத் தொழிலாளர்களின் அடிப்படைச் சிக்கல்களைச் சித்திரிப்பது இப்புதினம். அவரது "இரண்டு இலையும் ஒரு மொட்டும்" "Two leaves and a bud" என்ற புதினம், அசாம் தேயிலைத் தோட்டப் பணியாளர்களின் இன்னல்களை எடுத்துக் கூறுவதாக உள்ளது.

"கிழவியும் பசுவும்" (The old women and the cow) என்ற புதினத்துக்கு 'கௌரி' (Gowri) என்ற தலைப்பைக் கொடுத்தார். இதில் பெண்களுக்கு நேரிடும் இன்னல்களையும், அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுதலையும் விளக்கிக் கூறியுள்ளார். அன்றியும் கௌரி பாத்திரத்தின் மூலம் பெண் எதிர்ப்பைக் கண்டு துவண்டுவிடாமல் எதிர்த்துப் போராடி முன்னேற வேண்டும் என்ற படிப்பினையையும் கற்றுத்தருகிறார்.

ஏறத்தாழ 90 ஆம் வயதை எட்டிய முல்க்ராஜ் ஆனந்து புதினங்கள் மட்டுமல்லாது பல்வித இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது எழுத்தானது பல விழுதுகளைத் தாங்கிய ஆலமரம் போன்று பரந்துள்ளது. எந்த விதமான சோர்வோ, முதுமையின் தாக்கமோ இல்லாமல் இன்றும் சுறுசுறுப்புடன் எழுத்தாலும், பேச்சாலும் தம் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். மேலும் சமுகப் பணியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார். இத்தகைய மாமனிதரை நான் சந்தித்தது என்னுடைய பெரும் பேறாகக் கருதுகிறேன். அவரிடம் நான் கண்ட நேர்காணலின் போது அவர் அளித்த விடைகளைக் கீழே காண்போம்.

**வினா:**

**1. புதினம் எழுதுவதற்கு உங்களுக்குத் தூண்டுதலாக இருந்தது எது?**

சிறுவயதில் நான் வாழ்ந்த ஊர், பிறந்த வீடு, பெற்றோர்களின் செயல்கள் போன்ற பல நிகழ்ச்சிகள் என் மனத்தைப் பாதித்தன. குறிப்பாக,

தீண்டாமை பற்றிய கொடுமைகள் என்னை மிகவும் பாதித்தன. என் தாயாரே தீண்டாமை என்ற பெயரால் வேற்றுமை பாராட்டுவதை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. மேலும் வெள்ளையர்களின் ஆட்சியின்போது இந்திய மக்களுக்கெதிராக அவர்கள் நடத்திய கொடுமைகளும் என் மனத்தில் பதிந்தன. இது போன்ற பல நிகழ்வுகள் என்னை நாவல் எழுதத் தூண்டின. நாவல் எழுதுவதன் மூலம் என் மனத்தில் புதைந்து கிடந்த பல கேள்விகளுக்கு வடிகால் அமைத்துக் கொண்டேன்.

**2. இந்திய சமூகத்தில் பெண்களின் நிலைமை என்ன? அதைப் பற்றித் தங்கள் கருத்து யாது?**

இந்தியப் பெண்களின் நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், இன்றும் நான்கு சுவருக்குள்ளேயே தம் வாழ்க்கையைக் கழித்துவருகின்றனர். அது மரபாகவும் தொடர்ந்து வருகிறது. பெண் திருமணத்திற்கு முன் தந்தைக்கும், திருமணமானபின் கணவனுக்கும், வயதான பின் பெற்ற பிள்ளைகளுக்கும் அடிமையாகவே வாழ்ந்து வருகிறாள். பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்கள் பெண்களே. கல்வியால் முன்னேறினாலும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்திற்குத் தடையாக இருப்பது அவர்களின் தாழ்வு மனப்பான்மையே என்றாலும், இன்றைய சூழலில் பெண்கள் ஓரளவு முன்னேறியுள்ளனர்.

**3. குழந்தைத் தொழிலாளர் பற்றிக் 'கூலி' என்ற புதினத்தில் மிகச் சிறப்பாகச் சித்திரித்துள்ளீர்கள். அவர்களின் இன்றைய நிலை பற்றி உங்கள் கருத்து யாது!**

இன்றைய சூழலில் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டுதான் இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். அரசு குழந்தைத் தொழிலாளர்களைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றினாலும், அவை ஏட்டளவில் மட்டுமே உள்ளன. பல சமூக அமைப்புகள் அதற்கு முனைந்தாலும் சரியான பலன் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

**4. இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் அறிவுரை யாது?**

ஒவ்வொரு எழுத்தாளனும் தன்னை, தன் பெற்றோரை, தன் கிராமத்தை, தன் சமூகத்தை, தன் சூழலை நன்கு தெரிந்து கொள்ளும் அறிவு வேண்டும். அந்தக் கண்ணோட்டமே பிறருடைய சூழலை எழுதுவதற்கு அடிப்படையாகும். இந்த அறிவு இன்றைய எழுத்தாளர்களுக்குத் தேவை.

# நூல் மதிப்புரை

பேராசிரியர் பொன் விசயன்

நூல்: **கல்கரையும் நேரம்**

(சிறுகதைத் தொகுதி)

| | | |
|---|---|---|
| கன்னடமூலம் | : | பி. லங்கேஷ் |
| தமிழில் மொழியாக்கம் | : | பாவண்ணன் |
| வெளியீடு | : | சாகித்திய அகாதெமி |
| விலை | : | ரூ. 100/- |

'அடிப்படையில் மனிதன் மோசமானவன்' – இது தாகம் கதையில் வரும் நாயகனின் கூற்றாக இருந்தாலும், பி. லங்கேஷின் உள்ளார்ந்த முடிவும் இதுதான் என்பதை அவரது பல பாத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. 'மனிதன்' என்பது ஆண், பெண் என இருவரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் புத்தகக் கடை நடத்தும் கண்டிப்பான முதலாளியான நிர்மலா (நன்றி) யாருக்கும் தெரியாமல் செக்ஸ் புத்தகங்களை விரும்பிப் படிக்கிறவளாயிருக்கிறாள். மேலும் 'ஒரு கதவு' – கதையில் ஆதரவற்ற சென்னம்மா என்கிற ஏழை மூதாட்டியின் குடிசைக்குத் தனது தேக்குமரக் கதவைத் தருகின்ற பித்துக்குளித்தனமான முதலாளியும், அந்தத் தேக்குமரக் கதவையும் வஞ்சித்துத் திருடும் முனிராஜ் – தாஸ் கூட்டணியும் நம்முன் வாழ்பவர்தாம்.

என்றாலும், தாழ்த்தப்பட்ட சாதியினரைக் கொடுமைப்படுத்தும் உயர்சாதிக்காரரும் திருந்தும் வாய்ப்புள்ளது என்பதைக் 'கல் கரையும் நேரம்' – கதையில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். இருபத்தெட்டுப் பக்கங்களையுடைய இக்கதையைக் குறுநாவல் என்று கூறுவது பொருந்தும்.

முதுமையில் ஏற்படும் சிக்கல், மனச்சோர்வுகளை **'ஸ்டெல்லா என்னும் பெண்'** – கதையில் மிகவும் இயல்பாகச் சொல்லியிருக்கிறார் என்பது வயதைக் கடந்த சுப்பண்ணா நோயில் வீழ்ந்த நிலையில், நாகரிக

வாழ்வில் மூழ்கிப்போயிருக்கும் தன் மகனும் மருமகளும் தன்னைப் பார்ப்பதற்கே அருவருப்பு அடைவர் என்று நினைக்கிறார். மகனிடம் 'என்னைச் சாகவிட்டுடுப்பா. எண்பத்தஞ்சி வருஷம் வாழ்ந்துவிட்ட பிறகு இன்னும் ரெண்டு வருஷம் கூட இருந்து என்ன செய்யப் போறேன்' என்று கூறுவது சூழ்நிலையால்தான். உண்மையில் சுப்பண்ணா சாவைக் கண்டு பயத்தில் மூழ்கியிருக்கிறார் என்ற குரூரமான உண்மை வாசகர் மனத்தைச் சோகத்தில் ஆழ்த்துகிறது. சாவுப்படுக்கையில் கிடக்கும் கிழவனையும் பெண்ணாசைவிடுவதில்லை என்கிற கசப்பான உண்மையும் இதே கதையில் சொல்லப்படுகிறது.

திருமணத்திற்கு முன்னர் பெண்கள் தமக்கு அமையவிருக்கும் கணவனைப் பற்றிப் பகற்கனவு காண்பதும், கனவுக்கு அப்பாற்பட்ட நிலையில் கணவன் அமைந்துவிடுமாறு விதி விளையாடிட, அதையும் ஏற்றுக்கொண்டு வாழ்வு நடத்தும் யதார்த்தம் 'காணாமல் போதல்' கதையில் இடம் பெறுகிறது.

சிறுகதைக்கு இதுதான் இலக்கணம் என்று யாரும் வரையறை செய்துவிட முடியாது. எந்தவொரு அணியிலக்கணமும் விரவாது இயல்பான அழகுடன் விளங்கும் தன்மையணிபோல், சிறுகதைக் கூறுகளை வெளிச்சம் போட்டுக் காட்டாமல் எளிமையாக அமைந்துவிடுகின்ற மிகச் சிறந்த சிறுகதைகள் படைக்கப்படுவதுண்டு. பி.லங்கேஷின் சில கதைகளும் இவ்வகையுள் அடங்கும்.

'சாகித்திய அகாதெமி' யின் வெளியீடாகையால் அச்சும், நூலமைப்பும் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே ஈர்க்கின்றன. அச்சுத்துறை, கணினியொடு கலந்துவிட்ட இந்நவீன காலத்தில் இந்நூலுள் ஆங்காங்கே அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன. 'அகாதெமி' இனிமேலாவது இதனைத் தவிர்க்கலாம்.

பாவண்ணனின் மொழியாக்கம் அருமையாக அமைந்திருக்கிறது கன்னட மொழி பேசும் பாத்திரங்கள் தமிழ் பேசும் போது அவர்களுடைய பண்பாட்டுக் கூறுகள் மாறிவிடாமல் மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது.

# கூடும் பறவையும்

- பேரறிஞர் மலையமான்

உயிர், மனம் என்ற இரண்டும் மிகவும் முக்கியமான கூறுகள்; மிகுதியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறப்பான பகுதிகள். தென்றலைப் போல, கண்ணால் காண முடியாத பெருமைக்குரிய தனிக் கூறுகள். இவற்றை உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இவற்றுக்கு முழுமையான விளக்கம் தருதல் இயலாது. இந்த இரண்டில் உயிர் முதன்மையானது. உயிர் உடம்பை இயக்குகிறது. எனவே தான், உயிர் எழுத்து என்று, தமிழில் 'அ' முதல் 'ஔ' வரை உள்ள எழுத்துக்களுக்குப் பெயர் தரப்பட்டுள்ளது. (உயிர் எழுத்து என்ற காரணப் பெயர் தரப்பட்டுள்ள முறை வேறு எந்த மொழியிலும் இல்லை எனப்படுகிறது) மரபு, செடி, கொடிகளின் அசைவினால், தென்றலின் இருப்பு உணரப்படும். உடலுறுப்புகளின் அசைவினால் உயிரின் இருப்பு புலப்படும்.

உயிரைப் பற்றிய ஆய்வு நெடுங்காலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இறப்பு தரும் அச்சமும், குழந்தைப் பிறப்பின் வியப்பும் உயிரின் சிறப்பினுடைய இரு சிறகுகளாக விரிந்துள்ளன. உயிரைப் பற்றிக் கூறும்போது, அதைக் கனவில் வரும் மனித உருவத்தோடு ஒப்பிட்டு இலக்கியம் ஒன்று கூறுகிறது. சிறுவன் ஒருவன், ஒரு சட்டையை எறிந்துவிட்டு, மற்றொரு சட்டையை அணிந்து கொள்வதைப் போன்றதே உடம்பில் உயிர் புகுவது என்றும் சொல்லப்படுவதுண்டு.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு பற்றி, நெடும்புகழ் ஏந்திய திருவள்ளுவரும் சிந்தனை செய்திருக்கிறார். அதை உவமையாக்கிச் சிறப்பித்திருக்கிறார். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவு நிலை உடம்பொடு உயிரிடை அன்ன தொடர்பு என்றார். (கு. 1123) உடம்பில் குடியிருக்கும் உயிருக்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வாழக்கூடிய - வீடு இதுவரை அமையவில்லையோ, என்று அவர் கேள்வியும் கேட்கிறார்.

*"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
*துச்சில் இருந்த உயிர்க்கு"* (கு. 340)

என்று அவர் வினவினார்.

உடம்பை விட்டு உயிர் நீங்குகிறது. இது பற்றிய ஓர் உவமை, அறிவொளி ஞாயிறான திருவள்ளுவரின் உள்ளத்தில் தோன்றுகிறது. உயிர் என்பது ஒரு பறவை அது தங்கியிருந்த உடம்பு ஒரு கூடு போல, உடம்பை விட்டு உயிர் வெளியேறுகிறது என்று கூறுகிறார் மாபெரும் புலவர் திருவள்ளுவர்.

*குடம்பை தனித்தொழியப் புள் பறந் தற்றே*
*உடம்பொடு உயிரிடை நட்பு* (கு. 338)

என்பது அவர் அருளிய திருக்குறள்.

இது போன்றதோர் உவமை அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது 'தலைவன் தலைவியை விட்டு நீங்கிச் சென்றான். இதைத் தலைவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்த நிலையை விளக்க வந்த அவள், இப்படிக் கூறுகிறாள். அசையும் மரக்கிளையில் உள்ள கூடு பொலிவிழந்து போகும்படியாக அதை விட்டுப் பறவை வெளியே பறந்து சென்றதைப் போல, உடம்பாகிய என்னை விட்டு, என் உயிர் (தலைவன்) தான் செய்யப் போகும் பணிமேற் சென்று விட்டது என்று கூறி வருந்துகிறாள்.

*"அவங்கலஞ் சிளைக் குடம்பைப் புல்லெனப்*
*புலம்பெயர் மருங்கில் புள்ளெழுந்தாங்கு*
*மெய் இவண் ஒழியப் போகியவர்*
*செய்வினை மருங்கிற் செலியர் என் உயிரே"*

என்பன அகப்பாட்டு வரிகள். (அகம் 113) திருவள்ளுவரின் கருத்தோடு, இஃது ஒத்துள்ளது. அந்த உலகப் பேராசானின் உவமை, உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து செல்லும் அந்த நிலையை மட்டும் குறிப்பிடவில்லை. ஆழ்ந்து பார்க்கும் போது, இந்த உவமை பல்வேறு கருத்துகளைப் படிப்பவர் நெஞ்சில் அடுக்கிவைக்கிறது.

கூடு பறவையின் உறைவிடமாக உள்ளது. இந்தக்கூட்டில் பறவை பல காலம் தங்கியிருந்திருக்கிறது. ஆனால் ஒருநாள் அந்தப் பறவை திடீரென்று அதைவிட்டுவிட்டு வேறிடத்திற்குச் சென்று விடுகிறது. அது தன்னைவிட்டு அப்போது பிரிந்து செல்லும் என்பது அந்தக் கூட்டிற்குத் தெரியாது. உடம்பில் உயிர் உறைகிறது. அது பல்லாண்டுகளாக உடம்பில் தங்கியிருக்கிறது. ஒருநாள் அது உடம்பிலிருந்து பிரிந்து செல்கிறது. அப்படி அது பிரிந்து செல்லும் நாளும் நேரமும் உடம்புக்குத் தெரியவே தெரியாது.

பறவை மிகுந்த விருப்பத்துடன் கூட்டைக் கட்டும். தானும் குஞ்சுகளும் வசதியாகத் தங்கியிருப்பதற்குக் கூட்டை அமைக்கும். ஆனால் அது வரை வசதியாகத் தங்கியிருப்பதற்கு உதவி செய்த கூட்டிடம், அந்தப் பறவை விடைபெற்றுக் கொண்டு பறந்து செல்வதில்லை. உடம்பு, உயிர் தங்கியிருப்பதற்கு ஏற்றதாக வசதியாக இருக்கும். உணவாலும், உடையாலும், சிறந்த மருந்தாலும், உயிர் தன்னைவிட்டு நீங்கிச் செல்ல இடம் தராதபடி,

கவனித்துக் கொள்ளும். ஆனால், அந்த உடலைவிட்டுச் செல்லும் உயிர், உடம்பிடம் சொல்லிவிட்டுப் பிரிவதில்லை.

பறவை தங்கி வாழ்வதற்குக் கூடு உதவி செய்திருக்கிறது. வெயிலும் மழையும் அதைத் தாக்கினாலும், அது தன் கடமையைத் தவறாமல் செய்திருக்கிறது. அப்படி இருந்தும், பிரியும் பறவைக்குக் கூட்டின் மேல் சிறிதும் பாசம் இல்லை. கூட்டை விட்டுப் பிரிவது பற்றி எண்ணி அது வருந்துவதில்லை. உடம்பில் உயிர் தங்கியிருக்கிறது இயற்கையின் சீற்றங்கள் உடம்பைத் தாக்கினும், அதனுள் இருக்கும் உயிர் பாதிப்பு அடைவதில்லை ஆயினும் பல காலம் தங்கி இருப்பதற்கு இடமாக இருந்த உடம்பின் மேலே உயிருக்கும் பாசம் இல்லை. உடம்பின் மீது உயிருக்கு அணுவளவும் பற்றோ பாசமோ இல்லை.

பறவை அக்கூட்டைக் கவனமாகக் கட்டி இருக்கும். கூடு கட்டத் தேவைப்பட்ட அத்தனைப் பொருட்களையும் தேடித் தேடிச் சேகரித்துக் கொண்டு வந்து தன் கூட்டை அது கட்டியிருக்கும் பல காலம் அதில் வசதியாகத் தங்கியிருக்கும். ஆனால் அது கூட்டை விட்டு வெளியேறிய பின் தன் கூட்டைப் பற்றி அது கவலைப்படுவதேயில்லை. நல்லதொரு கூட்டை விட்டுப் போகிறோமே என்று கூட எண்ணிப் பார்ப்பதுமில்லை. மேலும் அது வெளியேறிய பிறகு அக்கூட்டிற்குத் திரும்பி வருவதுமில்லை. பொதுவாக மனிதனின் உடம்பு நன்கு ஓம்பப்படும். கவனமாகப் போற்றப்படும். அதனுள் இருந்த உயிர் அந்த உடம்பில் பல ஆண்டுகள் - நெடுங்காலம் நெருக்கமாக வாழ்ந்த உயிர் அந்த உடம்பை விட்டுப் பிரியும் போது மனம் வருந்துவதில்லை. உடம்பை விட்டுப் பிரிவதற்காக அது கண்ணீர் விட்டுக் கலங்குவதும் இல்லை. பிரிந்த அவ்வுயிர் அவ்வுடம்பிற்குள் திரும்பி வருவதுமில்லை.

பறவை தனியாக விட்டுச் சென்ற கூடு காலப் போக்கில் அழியும். கவனிப்பு இல்லாமையால், அது தானாகவே அழியும். குரங்கு முதலியவற்றால், அது கலைத்து எறியப்படவும் கூடும் எப்படியிருந்தாலும் அந்தப்பறவையின் கூடு அழிந்தே போய் விடும். உடம்பை விட்டு உயிர் பிரிந்து சென்ற பிறகு அந்த உடம்பு அழியத் தொடங்கும் எவ்வளவு தான் கவனிப்புக்கு உட்பட்டாலும் அவ்வுடம்பு அழிந்தே விடும்.

பறவைகள் தாமே கூடுகட்டிக் கொண்டு வாழும் சிறப்புடையவை. ஒரு பறவை விட்டுச் சென்ற கூட்டில், பெரும்பாலும் மற்றொரு பறவை வந்து தங்குவதில்லை. எனவே காலியான கூடு இன்னொரு பறவையின் வாழிடமாக அமைவதில்லை. உயிர் உடம்பை விட்டுச் சென்ற பின்பு அவ்வுடம்பில் மற்றோர் உயிர் குடிபுகுவதில்லை. எனவே உயிர் நீங்கிய உடம்பு மற்றோர் உயிரின் வாழிடமாக அமைவதில்லை.

பறவை கூட்டை விட்டுப் பறந்தோடிச் சென்ற பிறகு அப்பறவை மீண்டும் தன்னைத் தேடி வரும் என்று அந்தக் கூடு எதிர் பார்க்காது. அது தன்னிடமிருந்த அந்தப் பறவையைப் பற்றி நினைத்துக் கூடப்பார்க்காது. உயிர் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற பிறகு, மீண்டும் அவ்வுயிர் தன்னிடம் வரும் என்று உடம்பு எதிர்நோக்குவதில்லை. அந்த உயிரைப் பற்றி நினைத்துப் பார்க்கும் நிலையும் அதற்கில்லை.

இவ்வாறு உயிரைப் பறவையாகவும், உடம்பைக் கூடாகவும் உவமையாக்கி நுண்ணிய கருத்துக்களை மனத்தில் பதியவைத்துள்ளார். விண்முட்டும் புகழ் பெற்ற வித்தகர் திருவள்ளுவர்.

'கூடு' என்பதற்குப் பதிலாக 'மரம்' என்று சொல்லி இதே போன்றதொரு கருத்தை சமண முனிவர்களும் அறிவித்துள்ளனர்.

*"சேக்கை மரனொழியச் சேணிங்கு புட்போல*
*யாக்கை தமர்க்கொழிய நீத்து"* (நாலடி-30)

என்று கூறப்பட்ட உவமையும் எண்ணி இன்புறத்தக்கதாகும்.

# உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல்நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைக்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம்
இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை.
நேரம் : மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. ✆ 536361-68
Fax : 536353 E-mail : mmhrc @ md2.vsnl.net.in


அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116